விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 15 புதன்கிழமை (30.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 011

MoneyGram
WESTERN UNION WU
Ria
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1026)

## ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை வீரியமான புதிய தீர்மானமாக இருக்க வேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்



(கிளிநொச்சி) மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள பிரேரணை வீரியமான புதிய தீர்மானமாக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர் வரும் மார்ச் மாதம் 19

## யாழ்.மாநகர முதல்வர் யார்?

### ஆனல்டுக்கு எதிராக மணி களமிறங்குகிறார்

இன்று பலப்பரீட்சை

### ஈ.பி.டி.பி யாருக்கு ஆதரவு?





(யாழ்ப்பாணம்) யாழ்.மாநகர சபையின் முதல்வர் தெரிவு இன்று நடைபெறவுள்ளது. கூட்டமைப்பின் சார்பில் முதல்வர் வேட்பாளராக ஆனல்ட் களமிறங்குகின்றார். ஆனல்ட்டை எதிர்த்து சட்டத்தரணி மணிவண்ணனும் களமிறங்குகின்றார். 19

## நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தெரிவில்

### கூட்டமைப்பின் சார்பில் மதுசுதன்

(யாழ்ப்பாணம்) நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கு.மதுசுதனை நிறுத்துவதற்கு நேற்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலை இயக்கத் 19

## ஆற்றில் நீராடச் சென்ற கிராமசேவகர் மாயம்

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்) மன்னார் - நானாட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தோமஸ்புரி கிராமசேவகர் பிரிவில் கடமையாற்றும் கிராம சேவகர் ஒருவர் ஆற்றில் நீராடச் சென்ற நிலையில் நேற்று செவ்வாய்க் 19



## நான் கட்சி தொடங்கவில்லை

### ரஜினி அறிவிப்பு

10ஆம் பக்கம் பார்க்க

## யாழில் ஒரே நாளில் 8 பேருக்கு கொரோனா

### மருதனார்மடம் கொத்தணி 118 ஆக உயர்வு

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை 410 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

உடுவில் பகுதியில் ஏற்கெனவே கொரோனாத் தொற்று கண்டுபிடிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள் ஐவருக்கும் சுன்னாகம், தெல்லிப்பழை மற்றும் கீரிமலையில் தலா ஒருவருக்கும் கொரோ 19

## வடமராட்சி - கரணவாயில் வாள்வெட்டு தாக்குதல்

### பெண் உட்பட மூவர் படுகாயம்

(கரணவாய்) யாழ்ப்பாணம் - வடமராட்சி, கரணவாய் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் பெண் உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 19

## 2024 ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தே வேட்பாளராகப் போட்டி

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



(கொழும்பு) "2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவே போட்டியிடுவார்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி 19

## மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின்

### 13 பவுண் தாலிக்கொடி அறுப்பு

### வல்லைப் பகுதியில் சம்பவம்

(கரணவாய்) இனந்தெரியாத நபர்களால் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின் 19

## கோவிட் – 19க்கு மேலும் ஒரு உயிரிழப்பு

### +453 பேர் பாதிப்பு

(கொழும்பு) நாட்டில் கோவிட் - 19 நோயால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் 19

## மரண வீட்டுக்குள் நுழைந்து களவாடிய பெண்

### எழுதுமட்டுவாளில் சம்பவம்

(யாழ்ப்பாணம்) குடும்பத் தலைவரை இழந்து குடும்பமே சோகத்தில் ஆழ்ந்திருந்த வேளை துயரம் விசாரிப்பதுபோல் பாசாங்கு செய்த பெண் ஒருவர் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ். சாவகச்சேரி
# இல்வாரை நீர் வாய்க்காலை பார்வையிட அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி - கனகம்புளியடி வீதியில் இல்வாரை என்ற இடத்தை பார்வையிடுவதற்கு பெருமளவு மக்கள் கூடிவரும் நிலையில் பொதுமக்கள் அங்கு கூடுவதற்கு சுகாதார பிரிவு தடை விதித்திருப்பதுடன், மீறிக் கூடினால் பாரபட்சமின்றி அனைவரும் தனிமைப்படுத்தப்படுவார்கள் என சுகாதார பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, இல்வாரை என்ற பகுதியில் நீர் வாய்க்காலை பார்வையிடுவதற்காக பொதுமக்கள் அதிகளவில் கூடிவருகின்றனர். இதனையடுத்து முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியை பேணுதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு சுகாதார பிரிவினர் கோரியிருந்தனர்.

ஆனால் அங்கு கூடும் மக்கள் மிக மோசமான முறையில் சுகாதார நடைமுறைகளை உதாசீனம் செய்து குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் கூடிவருகின்றனர்.

இதனையடுத்து அந்த விடயத்தில் கரிசனை செலுத்திய சுகாதார பிரிவு, இல்வாரை பகுதியில் கூடுவதற்கு தடை விதித்துள்ளதுடன், இதனை மீறி அங்கு கூடினால் பாரபட்சம் இல்லாமல் சகலருக்கும் கட்டாய தனிமைப்படுத்தல் வழங்கப்படும் என எச்சரித்துள்ளது. (ம-03)


### தவறிவிட்டது

துரைராஜா காந்தலெனின் என்பவருடைய ஆள் அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கலான பேஸ் மானிப்பாய் சந்தைக்கும் - மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது.
கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.
077 906 6422
(C-1051)

### காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
076 702 3565
(5112)


## முல்லைத்தீவில்
# ஐவருக்கு கொரோனா

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தில் ஐந்து பேருக்கு கொரோனா தொற்று இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது

நேற்று மேற்கொள்ளப்பட்ட 115 பேருக்கான பி.சி.ஆர் பரிசோதனையிலேயே மேற்படி ஐவருக்குத் தொற்று இருப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-03,281)

# திருவாதிரை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான திருவாதிரை உற்சவம் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, திருவெம்பாவை ஓதுதல் வசந்தமண்டப பூஜை இடம்பெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார். (ம-03)

## புதுக்குடியிருப்பு வர்த்தக நிலையத்தில்
# திடீரென மயங்கி விழுந்தவர் வைத்தியசாலையில் அனுமதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் இயங்கி வருகின்ற பிரபல வர்த்தக நிலையமொன்றில் காசாளராக கடமையாற்றிய நபர் ஒருவர் திடீரென மயக்கமுற்று வீழ்ந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவரை தனிமையில் வைத்து அவருக்கான சிகிச்சைகள் இடம்பெறுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-03,281)

# புத்தர் சிலைகள் விசமிகளால் உடைப்பு

(கண்டி)

கண்டி - மாவனெல்லை வீதியின் ஹிங்குல பிரதேசத்திலும், அலுத்நுவர பகுதியிலும் உள்ள இரண்டு புத்தர் சிலைகள் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி கண்ணாடிகளை உடைத்துள்ளனர்.

இது குறித்து துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இருவேறு சம்பவங்கள் குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் மாவனெல்லை பொலிஸார் கூறுகின்றனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரலில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களின் போது மாவனெல்லை பகுதியில் இருந்த புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT

January 2021 க்கான புதிய பிரிவு ஆரம்பம்



பகுதி நேர / முழு நேர கற்கை நெறி
படிக்கும் போதே வேலை வாய்ப்பு
வெளிநாட்டில் உயர்கல்வி தொடரும் வாய்ப்பு
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
படித்து முடித்ததும் 100% வேலை வாய்ப்பு

G.C.E O/L உடன்

TUITION FEE 30,000/- ONLY

CTHI
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0760579999 | 0213146171
(C-1052)


# மரண அறிவித்தல்

பிறப்பு 06 – 11 – 1950



இறப்பு 29 – 12 – 2020

## வரப்பிரகாசம் ஜோன் பப்ரிஸ் தவராசா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வரப்பிரகாசம் ஜோன் பப்ரிஸ் தவராசா நேற்று (29.12.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரப்பிரகாசம் - ஞானம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - இசபெல்லா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரிகிறேஸின் (றோசா) பாசமிகு கணவரும் மேவின் நிஷாந்தன், றெரன்ஸ் நிமலேஸ், ஜொஸ்லீன் றெனிற்றா (பட்டதாரி பயிலுநர் - பிரதேச செயலகம், கரவெட்டி), ஜொயிலின் வினிற்றா (பட்டதாரி பயிலுநர் - பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோசவ் செல்வராஜா (அமெரிக்கா), மேரி கொன்செப்சன் (கொன்சி, கரவெட்டி) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.12.2020 ) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இரங்கல் திருப்பலிக்காக புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கிரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1053)

கன்பொல்லை வீதி, கரவெட்டி. 076 766 2467 தகவல்:- குடும்பத்தினர்

# ஆண்டு பதினைந்தில் நினைவு கூருகின்றோம்



எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

அமரர்

## கணபதிப்பிள்ளை கணேசன்

திதி : அபரபக்க பிரதமை
( 30.12.2020 )

என்றும் உங்கள் புனித ஆத்மா எங்களை ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.


துன்னாலை மத்தி, கரவெட்டி. குடும்பத்தினர்

# தமிழ் மக்களை பாதிக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம்

## சி.வி.விக்னேஸ்வரன் காட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**பயங்கரவாதத் தடைச் சட்டம் வழமையான இந்த நாட்டின் சட்டத்திற்கு எதிரான சில விடயங்களைக் கொண்டுள்ளது. அதாவது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மாத்திரம் வைத்து கைதிகளுக்குத் தண்டனை வழங்கலாம் எனப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டாலும் அது எங்கள் சட்டத்தில் இல்லை. ஆகவே, இது ஒரு விசேடமான சட்டம். 1979 ஆம் ஆண்டில் தற்காலிகமாக கொண்டு வரப்பட்டதொரு சட்டம். அதனைத் தொடர்ந்தும் வைத்திருந்து தமிழ்மக்களை மிகவும் பாதிக்கும் வகையில் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தமிழ்மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**



கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பாதுகாப்பை வலியுறுத்தியும், அரசியல் கைதிகள் அனைவரது விடுதலையை வலியுறுத்தியும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை "குரலற்றவர்களின் குரல்" அமைப்பின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் கைதிகளுக்கும், சாதாரண கைதிகளுக்கும் இடையில் பலவிதமான வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இவர்களுக்கென்றே சில சட்ட திட்டங்கள் அமைக்கப்பட்டு அவர்களுடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தண்டனையாக விதிக்கிறார்கள். சித்திரவதை செய்து பெறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலமே அரசியல் கைதிகளுக்கான தண்டனையாக வழங்கப்படுகிறது. எனவே, பிழையான வழிமுறைகளாலேயே அரசியல் கைதிகள் சிறைகளில் வாட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு தான் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டுமென நாங்கள் கோரிக்கை முன்வைத்துள்ளோம்.

ஆகவே, தமிழ்த்தேசியக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஏகோபித்த வகையில் வெளிப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் எமது கோரிக்கையை ஏற்று விரைவில் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-18)

# மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியவர்களால் புதிய கொரோனா கொத்தணி உருவாகும் ஆபத்து

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியவர்கள் காரணமாக கொரோனா வைரஸ் கொத்தணிகள் புதிதாக உருவாகும் ஆபத்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய, கிழக்கு, வடமேல் மாகாணங்களில் புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் செயலாளர் மகேஸ் பாலசூரிய, இவர்கள் பண்டிகை காலத்தில் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியவர்கள் என குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே தாங்கள் மாவட்டங்களுக்கு இடையில் போக்குவரத்தினை கட்டுப்படுத்துமாறும் மேல் மாகாணத்திலிருந்து மக்கள் வெளியே செல்வதை தடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அந்த பகுதிகளில் புதிய நோயாளர்கள் உருவாகும் ஆபத்தும் சிறிய கொத்தணிகள் உருவாகும் ஆபத்தும் உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# பி.சி.ஆர். பரிசோதனைக்கு பயந்து வர்த்தகர்கள் தலைமறைவு

(கல்முனை)

கல்முனை மாநகர பொதுச் சந்தை பகுதியில் இராணுவத்தினர் மற்றும் பொது சுகாதார அதிகாரிகள் இணைந்து பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளும்போது, அங்கிருந்த சில வர்த்தகர்கள் கடைகளை அவசரமாக மூடிவிட்டு தலைமறைவாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (ஜ-4)

# தடுப்பூசிகள் தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசிகளை நாட்டிற்கு கொண்டுவருவது தொடர்பாக நேற்று முன்தினம் காலை உலக சுகாதார நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், நாட்டிற்கு மிகவும் பொருத்தமான தடுப்பூசி குறித்து விவாதங்கள் நடத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

மேலும் தடுப்பூசியின் தேவை மற்றும் தடுப்பூசியைப் பெற வேண்டிய தரப்பினர் உள்ளிட்ட விடயம் தொடர்பாக முடிவை எட்ட விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பிலிருந்து 192 நாடுகள் தடுப்பூசி கோரியுள்ளதாகவும், நன்கொடையாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் அதேவேளை தடுப்பூசியை வாங்கவும் ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரித்தானியாவில் கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றின் புதிய மாறுபாடு நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி புதிய மாறுபாடு வைரஸின் முந்தைய வீரியத்தை விட 70 வீதம் அதிக வலிமையானது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பேர் மீளக்குடியமர்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 46 ஆயிரத்து 741 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 995 பேர் வரையில் மீள்குடியேறியுள்ளதாக மாவட்ட செயலக புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வைத் தொடர்ந்து மேற்படி குடும்பங்கள் மீள் குடியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள 95 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இதுவரை 46 ஆயிரத்து 741 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

அதாவது 71 ஆயிரத்து 54 ஆண்களும் 74 ஆயிரத்து 943 பெண்களுமாக ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 995 பேர் இதுவரை மீள்குடியேறியுள்ளதாக மாவட்ட செயலக புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(5-4-315)

# இரணைதீவு இறங்குதுறை புரேவியால் பாரிய சேதம்



(கண்டாவளை)

கிளிநொச்சி இரணை தீவில் புனரமைக்கப்பட்ட இறங்குதுறை புரேவிப்புயல் காரணமாக சேதமடைந்துள்ளதாக பூநகரி பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள இரணைதீவு பகுதியில் இறங்குதுறை பொதுமக்களின் போக்குவரத்துகளுக்கு ஏற்ற வகையில் புனமைக்கப்பட்ட போதும் அது தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இது தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில், இரணை தீவு பகுதியில் மக்களின் நன்மை கருதி இரணை தீவுக்கான இறங்குதுறை யு.என்.டி.பி. நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்ட நிலையில் அண்மையில் வீசிய புரேவிப்புயல் காரணமாக அது கடுமையாக சேதமடைந்துள்ளது. இதனால் இரணைதீவு மக்களின் கடற்போக்குவரத்துக்களில் பாரிய சிரமங்கள் காணப்படுகின்றன.

தரைத் தொடர்புகள் இல்லாத ஏனைய தீவுகளில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது போல வீதி அபிவிருத்தி திணைக்களமோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபை இதற்கான படகுசேவைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (5-4-315)

# மக்களின் ஆணைக்கேற்ப நாட்டை நிர்வகியுங்கள்

## தேரர் கோரிக்கை

(அநுராதபுரம்)

மக்களின் ஆணைக்கு அமைய நாட்டை நிர்வாகம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக சிங்களே அமைப்பின் செயலாளர் மெடில்லே பஞ்ஞாலோக்க தேரர் தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி செயலகத்திற்கு எதிரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கம் அடக்கம் செய்ய போகிறதா? அல்லது அரசாங்கம் தன்னை அடக்கம் செய்து கொள்ளப் போகிறதா? என்பதை கேட்கவே பௌத்த பிக்குகளாகிய நாங்கள் இந்த இடத்திற்கு வந்திருக்கின்றோம்.

ஒரே சட்டம் எனக் கூறி ஆட்சியை பெற்றுக்கொண்டுள் ளதால், மக்களின் ஆணைக்கு அமைய நாட்டை ஆட்சி செய்யுங்கள் என்று ஜனாதிபதிக்கு கூறுகிறோம்.

பௌத்த பிக்குமார் வீதியில் இறங்கியமை குறித்து அரசாங்கமும் ஜனாதிபதியும் வெட்கப்பட வேண்டும்.

நாங்கள் இவ்வாறு வீதிக்கு



வந்து அலையை விட்டுள்ளமை, வீதியில் இறக்கியமை என்பன இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்பதற்கான மிகப் பெரிய உதாரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களை அழைத்துவரும் பணி தொடரும்

(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை தொடரும் என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு திரும்ப விரும்பும் அனைவரும் திரும்ப அழைத்து வரப்படுவார்கள் என்றும் இந்த நடவடிக்கையில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் மிக நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கும் எல்லைகளை கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்து நாட்டை மீண்டும் திறக்க வேண்டிய நேரம் இது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொற்றினால் சுற்றுலாத் துறை உள்ளிட்ட பல துறைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பொருளாதாரத்தையும் நாட்டின் எல்



லைகளையும் மீண்டும் திறப்பதற்கும் அரசாங்கம் வழிகளைத் தேடி வருகிறது என்றும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# நாளாந்த அடிப்படை வேதனமாகவே ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்



(கொழும்பு)

பெருந்தோட்ட மக்களுக்கான நாளாந்த அடிப்படை வேதனமாகவே ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகத்திற்கு கருத்துத் தெரிவிக்கும் போது உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ள தொழிற்சங்கங்கள் ஆயிரம் ரூபாவுக்கு அதிக தொகையை பெருந்தோட்ட நிறுவனங்களிடம் கோர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# கிழக்கில் புதிய முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு உருவாகியுள்ளது என புலனாய்வுப் பிரிவினர் அறிக்கையிட்டுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அந்த அமைப்பு குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமயத்தை அழிக்க எதிர்காலத்தில் உருவாக உள்ளதாகக் கூறப்படும் தலைவருக்கு எதிராக தற்போது இருந்தே முஸ்லிம் மக்களை தெளிவுபடுத்துவது இந்த அமைப்பின் நோக்கம் என தெரியவந்துள்ளது.

இந்த அமைப்பின் தலைவராக மருத்துவர் ஒருவர் செயற்பட்டு வருவதாகவும் அமைப்பில் 30 பேர் உறுப்பினர்களாக இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இணையத்தளம் ஊடாக இந்த புதிய அமைப்பின் செயற்பாட்டாளர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த சிங்கள இணையத்தளம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)

# சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

மாவதகம பிடகந்த பகுதியில் வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில் 8 வயது சிறுமி உயிரிழந்துள்ளார். பழைய வீட்டின் சுவரை உடைத்து அகற்றும் போது சுவர் இடிந்து விழுந்ததில் குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் 8 வயதான சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

(கொழும்பு)

அஹூங்கல்ல, பலபிட்டிய பிரதேசத்தில் துப்பாக்கியுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படை ஜயவர்த்தனபுர முகாமின் அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

34 வயதுடைய சந்தேக நபர் பலபிட்டிய, கொரகொட பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# தனிமைப்படுத்தலை மீறிய 28 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் 9 பொலிஸ் பிரிவுகள் உள்ளிட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், வீதிகள் மற்றும் தொடர்மாடி குடியிருப்புகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் மேலும் 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 5 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதியில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் போன்ற தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்டவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# கோட்டா, மகிந்தவுக்கு சீன ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் புத்தாண்டு வாழ்த்து அட்டைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கையெழுத்திட்ட புத்தாண்டு வாழ்த்து அட்டைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அனுப்பியதாக கொழும்பு சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சீன அரசாங்கம் இலங்கை சபாநாயகர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோருக்கும் வாழ்த்துக்களை அனுப்பியிருந்தது.

அதன்படி தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் லி ஜான்ஷ் சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்தனவுக்கு வாழ்த்துக்களை அனுப்பினார்.

சீன வெளியுறவு அமைச்சர் வாங்யி இலங்கை வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு வாழ்த்துக்களை அனுப்பினார் என தூதரக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-7-4)

# பலத்த காற்றால் 60 வீடுகள் சேதம்

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது.

மட்டக்களப்பு - கிரான் பகுதியை ஊடறுத்து வீசிய பலத்த காற்றினால் சுமார் 60 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வடிகான் கட்டமைப்பு உரிய முறையில் இன்மையால் மழை வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில் சிலநாட்களுக்கு பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ஜ-4)

# அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் 20 கொரோனா தொற்று நோயாளிகள்


(கொழும்பு)

**கொரோனா தொற்று நோயின் ஆபத்தான பாதிப்புக்களுடன் நாட்டில் உள்ள வைத்திய சாலைகளின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் தற்போது 20 போது சிகிச்சை பெற்று வருவ தாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதேவேளை, ஆபத்தான நோயாளிகளின் தொகை அதிக ரித்தால் சமாளிக்கும் வகையில் மேலும் 126 அதி தீவிர சிகிச் சைப் பிரிவு படுக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஹேமந்த ஹேரத் செய்தியாள ர்களிடம் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 70 சிகிச்சை மையங்களில் 11 ஆயிரத்து 575 படுக்கைகள் உள்ளன. இவற்றில் தற்போது மொத்தம் 8 ஆயிரத்து 188 படுக்கைகள் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்க ளால் நிரம்பியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# பள்ளத்தில் பாய்ந்த கார் உயிர் தப்பினார் வைத்தியர்



(கொழும்பு)

தெனியாய பிரதேசத்தில் கார் விபத்து நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் வைத்தியர் சென்ற கார் 80 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத் துக்குள்ளாகியது.

தெனியாய விஹாரஹேன பிரதேசத்தில் இருந்து தெனி யாய நோக்கி பயணித்த காரே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த காரில் தெனியாய வைத்தியசாலையில் கடமை யாற்றும் வைத்தியர் இருந்த தாகவும் வைத்தியர் சிறு காயங் களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கார் பலத்த சேதமடைந் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஜ-4)

# தம்மிக்கவின் பாணி அருந்திய ஐவருக்கு கொரோனா

(கொழும்பு)

கேகாலை தம்மிக்க பண் டார என்பவரினால் அறிமுகப் படுத்தி வைக்கப்பட்ட கொரோ னாவை அழிக்கும் பானத்தை பருகிய ஐவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி யுள்ளனர்.

வரக்காபொல மற்றும் கேகாலை பிரதேசத்தை சேர் ந்த 5 வயதுடைய சிறுவன் மற்றும் அவருடைய தாய் உட் பட ஐவர் கொரோனா தொற்றுக் குள்ளாகியுள்ளதாக வைத்தி யர் ஹரித அளுத்கே தெரிவித் துள்ளார்.

தாம் அந்த பானத்தை பரு கியதாக தொற்றுக்குள்ளான வர்கள் சுகாதார அதிகாரிகளி டம் தகவல் வெளியிட்டுள்ள னர். குறித்த ஐவரும் தற்போது கொரோனா சிகிச்சை நிலை யங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# அரசியல் கைதிகளை பிணையில் விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சிவாஜிலிங்கம் வலியுறுத்து



(குப்பிழான்)

கொரோனாவால் அரசி யல் கைதிகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுமாயின் இந்த மண் வெகுண் டெழும். புரட்சி வெடிக்கும். ஆகவே, தற்போ தைய அரசாங்கம் இந்த நிலை மைகளை உணர்ந்து தமிழ் அரசியல் கைதிகளுக்கு உட னடியாக வைத்திய சிகிச்சை களை வழங்கி அவர்களைப் பிணையில் விடுதலை செய்ய வேண்டும் எனத் தமிழ்த்தேசி யக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப் பினருமான எம்.கே. சிவாஜி லிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனாவால் பாதிக்க ப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பாதுகாப்பை வலி யுறுத்தியும், அவர்களின் விடு தலையை வலியுறுத்தியும் நேற்று முன்தினம் திங்கட் கிழமை "குரலற்றவர்களின் குரல்" அமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி ஆல யத்தின் பின்புறமாக அமை ந்துள்ள நல்லை ஆதீனத்தின் முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப் பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத் துத் தெரிவித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

1978 ஆம் ஆண்டில் மூன்று ஆண்டுகளுக்குத் தற்காலிகமா னது எனச் சொல்லப்பட்ட பயங் கர வாதத்தடைச் சட்டத்தால் 20 ஆண்டுகளையும் கடந்து எங்கள் உறவுகள் சிறைகளில் வாடிக் கொண் டிருக்கின்றனர். அரசியல் கைதிகளில் தமிழர் கள், சிங்களவர்கள், முஸ்லிம் கள் ஆகியோர் காணப்பட்டா லும் தமிழர்களே பெரும்பான்மை யாக உள்ளனர்.

கொரோனா காரணமாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உயிர் கள் பறிக்கப்படுமோ? என்ற அச்சம் உருவாகியுள்ள நிலை யில் அவர்களை உடனடியாகப் பிணையில் விடுதலை செய்ய வேண்டும். பிள்ளையானை பிணையில் விடுதலை செய்ய முடி யும் என்றால் ஏன் மற்றவர் களை விடுவிக்க முடியாது?

பொதுமன்னிப்பில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வ தற்கு நாள் செல்லுமானால் அவர் களை உடனடியாகப் பிணை யில் செல்ல அனுமதியுங்கள். அவர்கள் கொரோனாவுக்குச் சிகிச்சைகள் பெற்றுக் கொண்டி ருக்கும் போது கட்டம் கட்டமாக அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

தமிழ்மக்களும், முஸ்லிம் மக்களும் சமமானவர்கள். ஐக் கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை கூறியும் நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. ஆகவே, பயங்கர வாதத் தடைச்சட்டத்தை உடனடியாக மீளப்பெற வேண் டும் என்ற கோரிக்கையை மீள வும் வலியுறுத்துகின்றோம் என தெரிவித்துள்ளார். (ஜ-4-5-18)


# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திரு. சண்முகலிங்கம் அன்ரன் பிலிப் றோய்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் சின்னத்தம்பி சண்முகலிங்கம் அன்ரன்

அவர்கள் கடந்த 26.12.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04.08.1949
மறைவு 30.11.2020

எமது அலுவலகத்தில் பணிபுரியும்
திருமதி காயத்ரி நிசாந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் திரு.
கதிரேசன் அசோகன்
(உடுவில்)

அவர்களின் 31ம் நாள் நினைவுநாளில் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
வடமாகாண விவசாயத் திணைக்களம்.


# பாரம்பரிய மருந்துகள் மூலம் கொரோனா ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

## ஆயுர்வேத மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)


நோய் எதிர்ப்பு சக் தியை அதிகரிக்கும் பார ம்பரிய மருத்துவ தயா ரிப்புகள் மூலம் நாட்டில் கொரோனா தொற்று நோயை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடிந்துள் ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆயுர்வேத மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் பிரசாத் ஹெண்ட விதாரண இத னைத் தெரிவித்துள் ளார்.

நோய் எதிர்ப்பு சக் தியை அதிகரிக்கும் கொத் தமல்லி போன்ற பாரம் பரிய மருத்துவ பொருட் கள் கொரோனாப் பர வலை ஓரளவிற்கு கட் டுப்படுத்தின என்று அவர் இதன் போது குறிப் பிட்டுள்ளார்.

எனினும் நாட்டில் தொற்று நோயைக் கட்டு ப்படுத்தும் பாரம்பரிய மருத்துவத்தைப் பயன் படுத்த ஒரு ஒழுங்கமைக் கப்பட்ட திட்டம் ஒன்று இதுவரை இல்லாமை யானது பாரிய குறை பாடாகும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள் ளார். (ஜ-4)

# இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறுமுகத் தான்குளம் பகுதியில் சட்டவிரோதமாக தயாரித்த இடியன் துப்பாக்கியை வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு குறித்த நபரிடமிருந்து இடி யன் துப்பாக்கியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

ஆறுமுகத் தான்குளம் பகுதியில் வீட்டில் ஒருவர் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட துப்பாக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்குகிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டை சுற்றி வளைத்த பொலிஸார் துப்பாக்கியுடன் நபரையும் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4-281)




வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு லண்டனைத் தளமாகக்கொண்டு இயங்கும் வானவில் அமைப்பின் நிதியொதுக்கீட்டில் ஸ்கந்தவரோதயா ஆன்மீக அறக்கொடை நிதியத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் மணிமோகன் முன்பள்ளியில் தலா 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் கடந்த சனிக்கிழமை 40 பேருக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகரும் வானவில் திட்டத்தின் வடக்கு மாகாண இணைப்பாளருமான நேரு. கலந்துகொண்டு உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

# கடமைகளைப் பொறுப்பேற்றார் வைத்தியர் கணேசமூர்த்தி

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உணர் வழியியல் வைத்திய நிபுணர் எஸ். கணேசமூர்த்தி நேற்று முன்தினம் திங் கட்கிழமை கடமையேற்று தனது சேவைகளை ஆரம்பித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழைக் கிளையினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருத்துவர்கள் இந்த மாதம் 08 ஆம் திகதி ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளிலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு உணர் வழியியல் சிகிச்சை நிபுணரை விடுவிக்க மறுத்தமை தொடர்பான கோரிக்கை பிரதான கோரிக்கையாக அமைந்திருந்தது.

இதனால், நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தின் எதிரொலியாக 20 நாட்களின் பின் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த உணர் வழியியல் வைத் திய நிபுணர் யாழ் ப்பாணம் போதனா வைத்தி யசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையைப் பொறுப் பேற்றுக் கொண்டார். (5-4-18)

# இம்மானுவேல் ஆனல்ட் மீண்டும் போட்டியிடுவார்

(நல்லூர்)

யாழ். மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான பாதீடு தோற்கடிக் கப்பட்டதனால் முதல்வர் பதவியை இழந்த இம்மானுவேல் ஆனல்ட், அந்தப் பதவிக்காக மீண்டும் போட்டியிடுவார்.

இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா அறிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை முதல்வர் பதவிக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பும் வகையில் வடமாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் தலைமையில் இன்று தெரிவு இடம்பெற வுள்ளது.

இந்த நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் இம்மானுவேல் ஆனல்ட் முதல்வர் பதவிக்கு போட்டியிடுவார் என்று கட்சியின் தலைவர் அறிவித்துள்ளார்.

நேற்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண தலைமை அலு வலகத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்று யாழ்ப்பாணம் மாநகர சபை கூட்டப்பட்டு முதல்வர் தெரிவு இடம்பெற உள்ளது.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-33)

# ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு நாளை மறுதினம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறும்.

சொற்பொழிவு சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் பொன். சந்திரவேல் வேலுண்டு வினையில்லை என்னும் தலைப்பில் ஆன்மீக சொற் பொழிவாற்றுவார். (5-4)

# வீதி புனரமைக்க கோரிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட அல்லாரை-வெள்ளாம்போக் கட்டி ஊர் எல்லைத் தெருவினை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஊர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதி கொடிகாமம் மருதடிப் பிள்ளையார் ஆலயம் உள்ளிட்ட பிரசித்தி பெற்ற தலங்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாகக் காணப்படுகிறது. அண்மையில் பெய்த கனமழை காரணமாக குறித்த வீதியில் நீர் தேங்கி போக்குவரத்துச் செய்ய இயலாத நிலை காணப்படுகிறது. எனவே அவ் வீதியை புனரமைக்குமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-30)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வருடந்தோறும் ஜனவரி முதலாம் திகதி திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் நாளை மறுதினம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் திருவாசக முற்றோதல் நடைபெறும். (5)



தேசிய ரீதியில் சமுர்த்தி வங்கிகளை கணனிமயப்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்திற்கமைவாக சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கியின் கணனிமயப்படுத்தல் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத் திட்டத்தை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார். (படம்-சிவசாந்தன்)



யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டாவளைப் பிரதேச வாழ் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கண்டாவளையில் வழங்கப்பட்டன.

(படம்-சுஜீவன்)

# மூன்று தினங்கள் விசேட சோதனை

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறுவோரை கைது செய்வதற்காக நேற்று முதல் மூன்று தினங்கள், நாடளாவிய ரீதியில் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

அனுமதியின்றி ஒன்றுகூடல்கள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென, பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பணிகள் இராணுவத்தினரிடம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடும் பொறுப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 வருடங்களாக தென் ஆபிரிக்க நிறுவனம் ஒன்று சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிட்டுவந்த நிலையில், அந்நிறுவனத்துடனான ஒப்பந்தம், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் முறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பிரகாரமே 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் இராணுவத்தினர் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடவுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் சுமித் அழகக்கோன் தெரிவித்தார். (ஐ-4)

# மரணித்தவரின் வீட்டில் மூவருக்கு கொரோனா

(கொழும்பு)

ரம்புக்கன- கொத்தனவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவரின் குடும்பத்தில், மேலும் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த 75 வயதுடைய நபரின் மகன், மகள் மற்றும் 15 வயதுடைய சிறுவன் ஆகியோரே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், அருகில் வசிக்கும் பாடசாலை மாணவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

# 108 பேர் நாட்டிற்கு

(கொழ்ம்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 108 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று செவ்வாய்க்கிழமை காலை வந்தடைந்தனர்.

அதன்படி கட்டாரிலிருந்து 83 பேர், அபுதாபியிலிருந்து 13 பேர், மாலைதீவிலிருந்து 12 பேர் நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

# சம்பிக்கவுக்கு பதவி

(கொழும்பு)

6 சிரேஷ்ட உப தலைவர்களையும், 5 உப தலைவர்களையும் நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

கட்சியின் புதிய யாப்பின் பிரகாரமே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி சம்பிக்க ரணவக்க், ராஜித சேனாரட்ன, சரத் பொனசேகா, குமார வெல்கம, தலதா அத்துகோரள மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ரவி சமரவீர, அஜித் பீ பெரேரா, சுஜீவ சேனசிங்க, சந்ராணி பண்டார, ரஞ்சன் அளுவிகார ஆகியோருக்கு உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது. (ஐ-4)

# மாகாண சபைத் தேர்தலுக்கு 4000 மில்லியன் ரூபா தேவை

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாயின் சுமார் 4,000 மில்லியன் ரூபா செலவாகும் என தேர்தல்கள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**



மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களுக்கான தீர்வு காணப்பட்டதன் பின்னர் தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டத்தில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் பாராளுமன்றத்தினூடாகவே தீர்வு காணப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# ஆஸிக்கு பதிலடி கொடுத்த இந்தியா



அவுஸ்திரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், இதுவரை இரண்டு போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், இந்திய அணி 1-1 என்ற கணக்கில் சமநிலைப்படுத்தியுள்ளது.

மெல்பேர்ன் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி, முதல் இன்னிங்ஸிற்காக 195 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மார்னஸ் லப்சேகன் 48 ஓட்டங்களையும் ட்ராவிஸ் ஹெட் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பும்ரா 4 விக்கெட்டுகளையும் அஸ்வின் 3 விக்கெட்டுகளையும் சிராஜ் 2 விக்கெட்டுகளையும் ஜடேஜா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 326 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அஜிங்கியா ரஹானே 112 ஓட்டங்களையும் ஜடேஜா 57 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், நாதன் லியோன் மற்றும் மிட்செல் ஸ்டாக் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் பட் கம்மின்ஸ் 2 விக்கெட்டுகளையும் ஜோஸ் ஹசில்வுட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

131 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, இரண்டாவது இன்னிங்ஸிற்காக 200 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதனால் இந்திய அணிக்கு 70 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கெமரூன் கிரீன் 45 ஓட்டங்களையும் மத்தியு வேட் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 3 விக்கெட்டுகளையும் பும்ரா, அஸ்வின் மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் உமேஷ் யாதவ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 70 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்திய அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

போட்டியின் முடிவில் சுப்மன் கில் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் அஜிங்கியா ரஹானே ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மிட்செல் ஸ்டாக் மற்றும் பட் கம்மின்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.


இப் போட்டியின் ஆட்டநாயகனாக இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் அஜிங்கியா ரஹானே தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி சிட்னி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ஐ-4)

# பிரபல மல்யுத்த வீரர் உயிரிழப்பு

WWE - தொழில்முறை மல்யுத்த வீரரான லூக் ஹார்ப்பர் என்று அழைக்கப்படும் ஜோன் ஹூபர் தனது 41 வயதில் உயிரிழந்துள்ளார்.

அவரது மனைவி அமண்டா ஹூபர், ஜோன் ஹூபர் கொவிட்-19 அல்லாத நுரையீரல் பிரச்சினையுடன் கடுமையாக போராடிய பின்னர் கடந்த 27 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்து ள்ளதாக தனது இன்ஸ்டாகிராம் பதிவில் கூறியுள்ளார். (ஐ-4)



# இயக்கச்சியில் குடிநீர் வழங்கலில் நெருக்கடிகள் காணப்படுகின்றன

(அக்கராயன்)

பச்சிலைப் பள்ளி இயக்கச்சியில் உள்ள பொதுக் கிணற்றினை இராணுவம் பிரதேச சபையிடம் கையளிக்காமல் பிரதேச சபை முன்னுரிமை அடிப்படையில் தண்ணீரினைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவித்துள்ளது என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இயக்கச்சியில் உள்ள குடிநீர்க் கிணற்றினை இராணுவம் பயன்படுத்துகின்றது.

இது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தினால் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையிடம் குறித்த குடிநீர்க் கிணறு கையளிக்கப்படும் என கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

நாமும் குறித்த கிணற்றினை சென்று பார்வையிட்டிருந்தோம். இராணுவம் ஆரம்பத்தில் கிணற்றினை கையளிப்பதாகத் தெரிவித்திருந்தது. ஆனால் இதுவரை கிணறு கையளிக்கப்படவில்லை.

இதன் காரணமாக இயக்கச்சி பகுதியில் குடிநீர் வழங்கலை மேற்கொள்வதில் நெருக்கடிகள் காணப்படுகின்றன.

ஆனால் குறித்த கிணற்றில் இருந்து இராணுவம் தூர இடங்களுக்கும் நீர் எடுத்து செல்கின்றது எனவும் தெரிவித்தார். (5-4-350)

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கடமைகளை சரிவரச் செய்வதில்லை

(குருமன்காடு)

வவுனியாவில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கடமைகளைச் சீராக செய்வதில்லை என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பிரதி பணிப்பாளர் துஸ்யந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள தனிமைப்படுத்தப் பட்டுள்ள வர்கள் தொடர்பில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அவர்களது கடமைகளை சீராக மேற்கொள்ளவில்லை என வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் துஸ்யந்தன் குற்றச்சாட்டினை முன் வைத்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கிராம உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கைகளை வழங்குகின்ற போதிலும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அவர்களை பார்வையிடச் செல்வதில்லை எனவும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் இவ் அலட்சிய செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான விபரமும் இருப்பதாக வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரிவிப்பதாகவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேன தெரிவித்தார். (5-4-250)

# சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுவர் அபிவிருத்தி குழுக்கூட்டம் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் மாவட்ட ரீதியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக பாடசாலை இடைவிலகல் மற்றும் மாணவர்களின் பிரச்சினைகள், கடந்த கூட்ட குறிப்பின் முன்னேற்பாடுகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

மேலும் பிறப்புச் சான்றிதழ் இல்லாத பிள்ளைகளுக்கான பிறப்புச் சான்றிதழ் களை பெற்றுக் கொடுத்தல், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், சிறுவர் இல்லங்கள், அறநெறி வகுப்புகள், சுகாதாரம், போசணை, போதைப்பொருள், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், பொலிஸார், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள்,சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பல்வேறு தரப்பட்டோர் கலந்து கொண்டனர். (5-4-281-315)

# தொற்றுநீக்கும் செயற்பாடுகள் இராணுவத்தால் முன்னெடுப்பு

(நெளுக்குளம்)



கொரொனா வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் தொற்றுநீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் இராணுவம், பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரின் பங்குபற்றுதலில் வவுனியா மாவட்டத்தின் முக்கிய பகுதிகள், சனநடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகள் பாடசாலைகள், பேருந்து நிலையங்கள் என்பன நேற்று தொற்று நீக்கம் செய்யப்பட்டன.

நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் மேற்பார்வையில் இடம்பெற்று வரும் இச் செயற்பாட்டில் அதிகளவான இராணுவத்தினர் கலந்து கொண்டனர். (5-4-299)

# வவுனியாவில் இதுவரை 10844 பி.சி.ஆர். பரிசோதனைகள்

(குருமன்காடு)

கடந்த மார்ச் 8ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி வரையில் வவுனியாவில் 10844 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற விசேட கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2727 பேருக்குப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில் 15 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 239 பேருக்குப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 554 பேருக்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில் 15 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 380 பேருக்குப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, இனிவரும் காலங்களில் பி.சி.ஆர்.பரிசோதனையை அதிகரிப்பதற்கான தீர்மானங்களும் இக் கூட்டத்தில் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5.4.250)

# இலவச மானிய உரம் வழங்கல் இன்று

(அக்கராயன்)

முல்லைத்தீவு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் இவ்வாண்டு காலபோக நெற்செய்கைக்கான இலவச மானிய உர விநியோகம் இன்று 30 ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்படும் என உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

பெரிய நீர்ப்பாசனத்தின் கீழ் 1,235 ஏக்கரிலும் சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் 90 ஏக்கரிலும் மானாவாரியாக 2,475 ஏக்கரிலும் நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள நிலையில் இப் பயிர்ச் செய்கைக்கான இறுதி உர விநியோகமே இன்று புதன்கிழமை இடம் பெறும்.

அனைத்து விவசாயிகளும் உரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-350)



பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தினால் எம் உறவுகளுக்கு கை கொடுப்போம் திட்டத்தினூடாக மன்னார் மடுப் பிரதேச செயலகப் பிரிவில் இயற்கை அனர்த்தத்தினால்பாதிக்கப்பட்ட 100 பெண் தலைமைத்துவக் குடும் பங்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதில் இணையத்தின் இணைப்பாளர் நிரோஜன் மற்றும் அதன் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: ஜோசப் நயன்)

# இராசிபலன்

30.12.2020
மார்கழி 15, புதன்கிழமை
பூரணை முற்பகல் 9.39 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 7.46 மணிவரை
சுபநேரம் 4.59-6.29 மணிவரை
இராகுகாலம் 12.29-1.59 மணிவரை
சந்திராஷ்டம்- கேட்டை, மூலம்
உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம் வளவன்


மேஷம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய் தொழிலில் மேன்மையுண்டு.


ரிஷபம்

நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.


மிதுனம்

உள்ளத்திலும், இல்லத்திலும் அமைதி கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம்.


கடகம்

எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தூரத்து உறவினர்களின் வருகையால் சுப செலவுகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.


சிம்மம்

பொன்னான நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், செய் தொழிலில் வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


கன்னி

செல்வாக்கு மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், கனவு பலிதமுண்டு.


துலாம்

பொருளாதார நிலை உயர என்ன வழியென்று திட்டமிடுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


விருச்சிகம்

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், விட்டுக்கொடுத்துச் செல்வதால் நிம்மதி கிடைக்கும், வரவை விட செலவு அதிகரிக்கும் நாள், திருடர் பயமுண்டு.


தனுசு

குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு.


மகரம்

உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், உடல் நலன் சீராகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், செய்தொழிலில் மேன்மையும், உயர்வும் கிட்டும், போசன சுகமுண்டு.


கும்பம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள் உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

நல்ல நம்பிக்கையில் உருவாகும் கருத்துக்கு என்றும் அழிவில்லை

# ஆரம்பப்பிரிவு பாடசாலைகள் இரு பிரிவுகளாக இயங்கும்

## கல்வி அமைச்சு தகவல்

**(கொழும்பு)**

**எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆரம்பப்பிரிவு பாடசாலைகளில் மாணவர்களை இரண்டு பிரிவுகளாக பாடசாலைகளுக்கு அழைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.**


இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி மாணவர்கள் மத்தியில் தனிப்பட்ட இடைவெளியை முன்னெடுப்பதற்காக இந்தத் தீர்மானம் மேற்கொளளப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான வேலைத்திட்டம் இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்த அவர், மாணவர்களின் நலன்கருதி முறையான திட்டமிடலுக்கு அமைவாகவே, ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பாடசாலைகளை திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இது உடனடியாக எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல என்றும் கூறியுள்ளார்.

விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் இதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறுகிய அரசியல் நோக்கில் இதுபற்றி கவனம் செலுத்தக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலைகளைத் திறக்குமாறு பெற்றோர் நாளாந்தம் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.



பாடசாலைகளுக்கான சுகாதார உபகரணங்களை வழங்குவதற்கென அரசாங்கம் 10.5 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-7-4)

# தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளராக அநுர மனதுங்க



(கொழும்பு)

சிரேஷ்ட பேராசிரியர் அநுர மனதுங்க, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆய்வுப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியராக அநுர மனதுங்க கடமையாற்றுகின்றார்.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசாநாயக்க எதிர்வரும் முதலாம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளதால், அந்த பதவிக்கு பேராசிரியர் அநுர மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7-4)

# 600 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணிகளுக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் 600ற்கும் அதிகமான கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக மகப்பேறியல் மற்றும் மகப்பேறு நிபுணர் வைத்தியர் மதுரம்மான தேவோலகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கர்ப்பிணித் தாய்மார் கொரோனா வைரஸிடமிருந்து மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

மாதாந்த பரிசோதனைகளுக்கு செல்வது தொடர்பில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அச்சம் காணப்படுகின்ற போதிலும், கட்டாயம் பரிசோதனைகளுக்கு செல்ல வேண்டும்.

கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளவர்களுக்கும், கொவிட் தொற்று ஏற்படாதவர்களுக்கும் இடையில் தொடர்புகளை பேணாத வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (நி-7-4)

# 21 வயதில் மேயராக பொறுப்பேற்றார் ஆர்யா

(திருவனந்தபுரம்)

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த 21 வயது இளம்பெண் ஆர்யா ராஜேந்திரன் திருவனந்தபுரம் மாநகராட்சி மேயராக நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

கேரளாவில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தல் நடை பெற்றது. இதில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றது. சில இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றது.

இதற்கிடையில், தேர்தலில் திருவனந்தபுரம் மாநகராட்சியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றியது. இதையடுத்து, மாநகராட்



சிக்கு மேயரை தேர்வு செய்வது தொடர்பாக ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இதில், உள்ளூராட்சி தேர்தலில் முடவன்முகல் வார்டில் கவுன்சிலராக வெற்றிபெற்றுள்ள ஆர்யா ராஜேந்திரன் என்ற 21 வயது இளம்பெண் திருவனந்தபுரம் மாநகராட்சி மேயராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.


21 வயதில் திருவனந்தபுரம் மாநகராட்சி மேயராக பொறுப்பேற்றதன் மூலம் இந்தியாவிலேயே மிகக்குறைவான வயதில் மேயர் பதவி பெறும் பெண் என்ற பெருமையை ஆர்யா ராஜேந்திரன் பெற்றுள்ளார். (நி-4)

# தங்கம் பறிமுதல்

(சென்னை)

டுபாயிலிருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட ரூ.2 கோடியே 47 லட்சத்து 35 ஆயிரம் மதிப்புள்ள 4 கிலோ 800 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்த சுங்க இலாகா அதிகாரிகள், இது தொடர்பாக தனியார் விமான நிறுவன என்ஜினீயர் உட்பட 3 பேரை கைது செய்தனர். (நி-4)

# கட்சி தொடங்கவில்லை ரஜினிகாந்த் அதிரடி அறிவிப்பு



(சென்னை)

தான் கட்சி தொடங்கவில்லை என ரஜினிகாந்த் நேற்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் புதிய கட்சி தொடர்பான அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், தான் கட்சி தொட ங்க வில்லை என ரஜினிகாந்த் நேற்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரஜினிகாந்த் நேற்று தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

என் உயிர் போனாலும் பரவாயில்லை. நான் கொடுத்த வாக்கை தவறமாட்டேன். நான் அரசியலுக்கு வருவேன் என்று சொல்லி இப்போது அரசியலுக்கு வரவில்லை என்று சென்னால் நாலு பேர் நாலுவிதமாக என்னை பற்றிப்பேசுவார்கள். என்னை நம்பி என் கூட வருபவர்களை நான் பலிக்கடா ஆக்க விரும்பவில்லை.

ஆகையால் நான் கட்சி ஆரம்பித்து, அரசியலுகு வர முடியவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அறிவிக்கும் போது எனக்கு ஏற்பட்ட வலி எனக்கு மட்டும் தான் தெரியும் எனப் பதிவிட்டுள்ளார். இதனால், ரஜினிகாந்த் அரசியல் கட்சி தொடங்குவாரா? என்ற கேள்விக்கு இல்லை என்ற பதில் கிடைத்துள்ளது. (நி-4)

# புதிய வகை கொரோனா அச்சம் பயணிகளை தடைசெய்தது ஜப்பான்




(டோக்கியோ)

முன்பை விட அதிக வேகத்தில் பரவும் வகையில் தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ள புதிய ரக கொரோனா வைரஸ் தொற்று, தங்கள் நாட்டிலும் பரவுவதைத் தவிர்க்கும் வகையில், அனைத்து வெளிநாட்டுப் பயணிகளின் வருகையையும் ஜப்பான் தடை செய்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'புதிய வகை கொரோனா வைரஸ் ஜப்பானில் பரவுவதைத் தவிர்ப்பதற்காக, அனைத்து நாடுகளிலிருந்தும் வெளிநாட்டினர் நாட்டுக்குள் வருவதற்குத் தடை விதிக்கப்படுகிறது. புதிய ரக கொரோனா வைரஸ் தொற்றினால், 50 நாடுகள் பிரித்தானியாவுடனான விமானப் போக்குவரத்து தடையினை தொடர்ந்தும் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 5 கோடி தடுப்பூசிகள் தயார் சீரம் நிறுவனம் அதிரடி




(டில்லி)

கொரோனா வைரஸுக்கு எதிராக 5 கோடி தடுப்பூசிகளை உருவாக்கியுள்ளதாக சீரம் அறிவித்துள்ளது.

இது குறித்து சீரம் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி தெரிவிக்கையில் "நாங்கள் 4 முதல் 5 கோடி மருந்துகளை தயாரித்துள்ளோம். ஆரம்பகட்டத்தில் தடுப்பூசியை வெளியிடுவது விநியோகிக்கும் பணிகள் மந்தமாக நடைபெறலாம் என்றும் விரைவில் அவை முறைப்படுத்தப்பட்டு விடும்.

அடுத்த மார்ச் மாதத்திற்குள் 10 கோடி டோஸ் தடுப்பூசிகள் தயாரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. கோவிஷீல்டு தடுப்பூசிக்கு விரைவில் இங்கிலாந்தில் ஒப்புதல் கிடைத்துவிடும் இந்தியாவிலும் அடுத்த மாதத்தில் அங்கீகாரம் கிடைக்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சீரம் மருந்து தயாரிப்பு நிறுவனம் இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்டு - அஸ்ட்ராஜெனேகா ஆகிய அமைப்புகளுடன் இணைந்து கொரோனா தொற்றுக்கு எதிராக "கோவிஷீல்டு" தடுப்பூசியை உருவாக்கி வந்தது.

தங்களின் கோவிஷீல்டு தடுப்பூசிக்கு அவசரகால பயன்பாட்டு அங்கீகாரம் வழங்கக் கோரி புனேவில் உள்ள இந்திய மருந்து கட்டுப்பாட்டு மையத்திற்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொவிட்-19 நிவாரண நிதியுதவி சட்டமூலத்தில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

கொவிட்-19 நிவாரணம் மற்றும் அரசாங்க நிதியுதவி சட்டமூலத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

பல நாட்கள் இழுத்தடிப்புக்கு பிறகு கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை இந்த சட்ட மூலத்தில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அமெரிக்காவில் கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிதியுதவி வழங்கவும், அரசாங்க நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டத் தேவையான நிதியை வழங்கவும் 2.3 டிரில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்வதற்கான ஆணையே இதுவாகும்.

எனினும், சில செலவு ஏற்பாடுகள் குறித்து அவர் புகார் தெரிவித்ததையடுத்து, நேரடி கொவிட்-19 கொடுப்பனவுகள் ஒருவருக்கு 600 டொலர்கள் மட்டுமே என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

எனினும் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 600 டொலர்களை, இரண்டாயிரம் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும்படி ட்ரம்ப் வலியுறுத்தியிருந்தார். (நி-4)

# பெண்கள் உரிமை ஆர்வலருக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(கட்டார்)

முக்கிய பெண்கள் உரிமை ஆர்வலர் லூஜெய்ன் அல்-ஹத்லூலுக்கு சவுதி நீதிமன்றம் ஐந்து ஆண்டுகள் மற்றும் எட்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதித்துள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


மாற்றத்திற்காக கிளர்ச்சி செய்தல், வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுவது மற்றும் பொது ஒழுங்கிற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இணையத்தைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் அல்-ஹத்லூல் நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட நிலையிலேயே இந்த தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-4)



# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சித்த மருத்துவத்தின் அடிப்படையில் நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள எமது யாக்கையின் இலக்கணம் (Personality)






டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

-பெண்களுக்கு மாதவிடாய் சீராகவும், அதிக நாள் நீடிப்பதாக இருக்கும்.

-குளிர்ச்சியான கால நிலையை விரும்புவர்.

-இவர்களது நாடித் துடிப்பு சமமாக இருக்கும்.

-பித்த யாக்கையினை உடையவர்கள் தங்களைச் சார்ந்தவர்களுடன் அதிக பாசமாக இருப்பார்கள்.

-வெகு சீக்கிரம் பழகி விடுவார்கள்.

-அதிகாரத் தன்மை இருக்கும்.

-பித்தத்தின் கோபத் தன்மையினால் ரஜோ குணத்துடன் இணைந்து செல்லும் தன்மை உண்டு.

-எப்போதும் உடலும் மனமும் சுறுசுறுப்பாக இருக்கும்.

-நன்றாகத் தூங்கும் இயல்புடையவர்கள்.

-ஆனாலும் வேலை வந்து விட்டால் இரவு முழுக்க விழித்திருந்து உற்சாகமாக வேலை பார்ப்பர்.

-உடல், மனம் இரண்டிலும் வேகம் கொண்டு இருப்பதால் விளையாட்டு, நாட்டியம் என்பவற்றில் ஆர்வம் அதிகமாக இருக்கும்.

-சீக்கிரம் கோபப்படுவார்கள். ஆனால் அதே வேகத்தில் சாந்தமாகி விடுவார்கள்.

### உண்ணத் தகுந்தவை

- இனிப்பு, துவர்ப்பு, கசப்பு, சுவையுள்ள உணவுகள்.
- குளிர்ச்சியான உணவுகள், சைவ உணவுகள், அரிசி, கோதுமை, பார்லி.
- முட்டைக்கோஸ், கரட், அவரை இனங்கள், காளான் தேங்காய், வெள்ளரி, உருளைக்கிழங்கு, கீரைகள், முட்டைக்கோவா, பீற்றூட், பட்டாணி, சோயா போன்றவை உகர்ந்தன.
- அப்பிள், தப்புசணி, மாதுளை, நெல்லிக்காய், பேரீட்சை, திராட்சை, செரிப்பழம்.
- பசும்பால், ஆட்டுப்பால், பால் சாந்த உணவுகள், பாதாம், தேங்காய் எண்ணெய் (அளவுடன்)
- கொத்தமல்லி, கறிவேப்பிலை, கிராம்பு, ஏலக்காய், மஞ்சள் போன்றவற்றை அதிகமாகச் சேர்க்கவும்.

### தவிர்க்க வேண்டியவை

- புளிப்பு, உப்பு, காரச் சுவை உள்ள உணவுகள்.
- பூண்டு, வெங்காயம், தேன், நல்லெண்ணெய், எலுமிச்சை, மாம்பழம், மிதமாகப் பயன்படுத்தலாம்.
- வெயிலில் அலைதல், அதிகமாகக் கோபப்படுதல், மதுபானம் போன்றவற்றைத் தவிர்க்கவும்.

பித்த யாக்கையினருக்கு இரத்தக் கொதிப்பு, ஈரல் நோய் சரும நோய், மூல நோய், மஞ்சள் நோய், வாய்ப்புண், மூர்ச்சை போன்ற நோய்கள் வர வாய்ப்பு உள்ளது.

### இவர்கள் நோய்களை எவ்வாறு தவிர்க்கலாம்?

இவர்கள் மனதைச் சாந்தமாக வைத்துக் கொள்வது, குளிர்ச்சியான இடங்களில் வசிப்பது, நீச்சல் பயிற்சி, மிதமான ஆசனங்கள், பிரார்த்தனைகள், தியானம் என்பவற்றின் மூலம் தமக்கு ஏற்படும் நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

### கப யாக்கையின் இலக்கணம்

-கப யாக்கையினருக்கு அங்கங்கள் மிருதுவாகவும், பளபளப்பாகவும் இருக்கும்.

-சுக்ல தாது நிறைந்து காணப்படுவதால், சந்தான விருத்தி உண்டு.

-உடல் கனத்து பருமனாக இருக்கும்.

-கபத்தின் மந்த குணத்தால் ஆகாரம், விகாரம், பேச்சு, செய்கை எல்லாவற்றிலும் மந்த கதியாக இருப்பர்.

-தலைமுடி அடர்த்தியாகவும், நகங்கள் கிடமாகவும் கண்கள் பெரிதாகவும் இருக்கும்.

-பெண்களில் மாதவிடாய் சீரானதாகவும், குறைவாகவும் இருக்கும்.

-எந்தக் காலநிலையும் இவர்களுக்கு ஒத்துப் போகும்.

-நாடித் துடிப்பு மெதுவாகக் காணப்படும்.

-ஆழ்ந்த உறக்கம் கொண்டவர்கள்.

-ஜீரண சக்தி நன்றாக இருக்கும்.

-தேவைக்கேற்றவாறு பேசும் தன்மை கொண்டவர்கள்.

-கோப தாபங்கள் ஏற்படுவது குறைவு.

-உறுதியான கிடத்தன்மையாக பொறுமை, தெளிவு போன்ற குணங்களும் உறுதியான உடலும் கொண்டவர்கள்.

-பசி, தாகம் குறைந்தளவில் இருக்கும்.

-வியர்வை அதிகம் இராது.

-தெளிவான பார்வை

-அழகிய முகத்தோற்றம், கம்பீரமான குரலும் காணப்படும்.

-பொதுவாக இவர்கள் பலசாலிகளாகலும், சாந்த குணம் உள்ளவர்களாகவும் தேஜஸ்வீயராகவும், படிப்பாளியாகும், தீர்க்க ஆயுள் உள்ளவராகவும் இருப்பார்.

-மந்த குணத்தால் தமோ குணமாகவோ, ஸ்திர குணத்தால் ஸாத்வீகமாகவோ இருப்பர்.

-அதிக நித்திரை உடையவர்கள்.

-இவர்களுக்கு கபத் தன்மை உள்ள நோய் வந்தால் கடுமையாகப் பாதிக்கும். விரைவில் குணமடையாது.

-பொறுமை குணம் மிக்கவர்.

-எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்.

-வாத, பித்த யாக்கையினைப் போல இவர்கள் உணர்ச்சிகளையும், ஆசைகளையும் வெளிப்படுத்த மாட்டார்கள்.

-ஆனால் உணர்ச்சிகள் கிளம்பி விட்டால் இவர்களால் அதைக் கட்டுப்படுத்துவது சிரமம்.

-மன உறுதி படைத்தவர்கள்.

-கிடைத்ததைக் கொண்டு திருப்திப்பட்டுக் கொள்வர்.

-மாற்றம் என்பது இவர்களைப் பொறுத்த மட்டில் தேவை இல்லாதது.

### உண்ணத் தகுந்தவை

-துவர்ப்பு, கசப்பு, காரம் சுவையுள்ள ஆகாரங்கள்

-பார்லி, கொள்ளு எடுக்கலாம்.

-உலர்ந்த பழங்கள், அப்பிள், அத்தி, கத்தரி, முள்ளங்கி, அவரை வகைகள், பூண்டு, வெண்டி, கீரை, சோளம், இஞ்சி, பெருங்காயம், பெருஞ்சீரகம், ஓமம், கிராம்பு, மிளகு என்பன உபயோகிக்கலாம்.

### தவிர்க்க வேண்டியவை

-இனிப்பு, புளிப்பு, உப்பு சுவையுள்ள உணவுகள்.

-எண்ணெயில் வறுத்தவை

-தக்காளி, உருளைக்கிழங்கு, மாமிசம், நெய், தேங்காய், அரிசி, கோதுமை, தேன், பால் (குறைவாகப் பயன் படுத்தலாம்).

-பகல் உறக்கம், அதிக ஓய்வு போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

கப யாக்கையினருக்கு தோல் அரிப்பு, உடல் பருமன், உடலில் வீக்கம், உணவு செரியாமை, இருமல், சளி, இருதயம் மற்றும் கொழுப்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படலாம்.

### இவர்கள் நோயிலிருந்து எவ்வாறு விடுபடலாம்?

கப யாக்கையினர் பகல் தூக்கத்தைத் தவிர்ப்பதன் மூலமும் உடற்பயிற்சி செய்வதன் மூலமும் நோய்களில் இருந்து விடுபடலாம்.

### இரட்டைத் தன்மை உடைய யாக்கையினர்

சிலருக்கு வாத, பித்த, கபம் இவற்றில் ஏதாவது ஒன்றின் தன்மை மட்டுமே அதிகமாகக் காணப்படும். இவர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் தமது உடல்கூறு பற்றித் திட்டவட்டமாக அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ள முடியும். ஆனால் பலருக்கு இரு தோஷங்கள் அதாவது வாத பித்தம், பித்த கபம், வாத கபம் என்று கலந்து காணப்படுவர். இவர்கள் இரட்டைத் தன்மை உடையவர்கள். இரட்டைத் தன்மை கொண்டவர்களின் குணங்களைப் பார்ப்போம்.

### 1) வாத -பித்த பிரக்கிரதி/ யாக்கையினர்

-இவர்கள் வாத தோஷத்தின் படி உஷ்ணத்தை விரும்பினாலும் அவர்களுடைய பித்த குணம் அதை அடக்கி விடும்.

-பித்த குணம் நிறைய சாப்பிடுவதற்கு தூண்டினாலும் வாத குணம் இருப்பதால் ஜீரண சக்தி நிலையற்று இருக்கும்.

-உடல் தோற்றம் வாத பித்தத் தன்மையை பொதுவாகக் கூட்டும்.

-வாதத்தின் சுருளும் பித்தத்தின் நீளமும் கலந்து தலைமயிர் அலை அலையாகக் காணப்படும்.

-பிரச்சினை என்று வரும் போது பயமும் கோபமும் மாறி மாறி வரும். அதன் பலனாக ஆத்திரமும் அதிகாரமும் வெளிப்படும்.

-பித்த குணம் அதிகாரத்தை கிளப்பும் போது வாத குணம் தன் சக்தியைப் பியோகித்து ஐயத்தை எழுப்பி விடும். எனவே பலவீனமே வெளிப்படும்.

-இவர்களுக்கு வாதத்தின் சுய சிந்தனைகளும், பித்தத்தின் செயற்படுத்தும் தன்மையும் இணைந்திருக்கும்.

-வாதத்தின் எளிமையும், பித்தத்தின் வலிமையும் இவர்களின் பொதுக் குணமாக அமையும்.

-இந்த வலிமையை சுய முன்னேற்றத்திற்காக பயன்படுத்த வேண்டும். இல்லாவிடில் போதைப் பொருட்களில் நாட்டம் ஏற்படும்.

-இனிப்புச் சுவை ஏற்றதாக இருக்கும்.

### பித்த-கப யாக்கையினர்

-எந்த நிலைமைக்கும் ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ளலாம், கபத்தின் உறுதியும் பித்தத்தின் இணைந்து செல்லும் தன்மையும் தான் இதற்கு காரணம்.

-எல்லா வகையிலும் வெற்றி காண்பர். மந்தத்தின் செயல் வேகமும், கபத்தின் வலிமையும் இதைக் கவனிக்கும்.

-பித்தத்தின் கோபத்தை, கபத்தின் எச்சரிக்கை உணர்வு அடக்கி விடும்.

-கசப்பு, துவர்ப்பு சுவைகள் இவர்களுக்கு ஏற்றது.

### 3) வாத-கப யாக்கையினர்

-வாதமும் கபமும் குளிர்ச்சியோடு சம்பந்தப்பட்டவை. எனவே வாத கப யாக்கையினர் கபத்தின் ஆதரவால் தனி வாத யாக்கையினரைப் போல் அதிகம் குளிரால் அவதிப்பட மாட்டார்கள்.

-பித்த யாக்கையினரைப் போல் சற்று உயரமாக சாதாரண உடல் கட்டுடன் காணப்படுவர்.

-அதிக உஷ்ணம் இல்லாததால் ஜீரண பிரச்சினைகள் ஏற்படலாம்.

கபம் கட்டுதல் போன்றனவும் ஏற்படலாம்.

-இவர்கள் தங்கள் வேலையில் மிகவும் கவனமாக இருப்பர்.

-சிந்திக்காமலேயே முடிவுக்கு வந்து விடுவர்.

-கபத்தின் உணர்ச்சியும் வாதத்தின் தீவிர உழைப்பும் சேர்ந்து உணர்ச்சி மிக்கவராக இருப்பர்.

-சிறிய பாதிப்பும் மனதில் ஆழமான விளைவை ஏற்படுத்தும்.

-இவர்களுக்கு எப்போதும் உஷ்ணம் தேவைப்படும்.

-இனிப்பு, கசப்பு போன்றவற்றைவிட உப்பு, காரம் போன்ற சுவைகள் மிகவும் பிடிக்கும்.

### ஸந்நிபாதப் பிரக்கிருதி/ யாக்கையினர்

வாதம், பித்தம், கபம் மூன்றும் சேர்ந்து இருப்பது ஸந்நிபாத யாக்கையினர். இவர்களிடத்தில் நோய் அண்டாது. நோய் வந்தால் சீக்கிரம் போகவும் செய்யாது.

மேற்கூறிய முறைகளில் உங்களது யாக்கையின் இலக்கணத்தை இலக்கணங்களை (Personality) நீங்களே அறிந்து கொண்டு இதன் மூலம் நோய்க்கான காரணிகளை ஒதுக்கி நோய்கள் அண்ட விடாது பார்த்துக் கொள்ள முடியும்.

(முற்றும்)

# புதிய வகை வைரஸ் தொடர்பில் கடும் சுகாதார விதிமுறைகள் அவசியம்

## எச்சரிக்கிறார் ஹரித் அளுத்கே



**(கொழும்பு)**

**ஐரோப்பிய நாடுகளில் மாத்திரமின்றி ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகள் சிலவற்றிலும் புதிய வகை வைரஸ் பெருமளவில் இனங்காணப்பட்டுள்ளது. எனவே இதன் பாதிப்பிலிருந்து நாம் தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவானதாகும். இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் நாட்டில் மேலும் கடுமையான சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித் அளுத்கே தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

எவ்வாறான புதிய வகை வைரஸ் தோன்றினாலும் அடிப்படை சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றினால் அவற்றிலிருந்தும் எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

புதிய வகை வைரஸ் இளைஞர் மத்தியிலேயே தீவிரமாகப் பரவலடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்தோடு வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அபாயம் அதிகமாகும்.

நாட்டில் தொற்றுக்குள்ளானோரில் 80 சதவீதமானோர் குணமடைந்துள்ளனர்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாட்டில் மரணங்களின் எண்ணிக்கை குறைவாகும். எனினும் கொழும்பு மாவட்டத்தில் வைரஸ் பரவல் கொழும்பு மாநகர சபையிலேயே மையம் கொண்டிருந்தது.

எனினும், தற்போது அவிசாவளை போன்ற பகுதிகளிலும் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுவதிலிருந்து கொழும்பு மாநகர சபையில் காணப்பட்ட அபாயம் ஏனைய பகுதிகளுக்கு பரவியுள்ளமை தெளிவாகியுள்ளது.

எனவே, ஏனைய பகுதிகள் தொடர்பில் எப்போதும் அவதானமாக இருக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

மக்கள் பொறுப்பற்று செயற்படுவது மேலும் அபாய நிலைக்கே நாட்டை இட்டுச் செல்லும்.

எவ்வாறிருப்பினும் இவ்வாறான நிலைமைகளிலிருந்து நாட்டை மீட்பதற்கு மக்களின் முழுமையான ஒத்துழைப்பே அத்தியாவசியமானதாகும் என தெரிவித்தார். (ஐ-4)

# தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் தொடர்பில் புதிய முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச்சம்பளத்தை 700 ரூபாவாக நிர்ணயிப்பதற்கு பிராந்திய தோட்ட நிறுவனங்கள் மற்றும் இலங்கை தோட்டக்காரர்களின் சங்கம் முன்மொழிந்துள்ளது.

குறித்த இரண்டு நிறுவனங்களும் இணைந்து பல முன்மொழிவுகளுடன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த வருமானத்தை அதிகரிப்பதை நோக்காகக்கொண்டு புதிய பல முன்மொழிவுகளை சமர்ப்பித்து தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை 700 ரூபாவாக கொடுக்க முன்மொழிந்திருக்கின்றோம்.

புதிய முன்மொழிவுகளை சமர்ப்பித்து நாளாந்த சம்பள முறைமைக்கமைய தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு வேலை செய்வதற்காக 1,025 ரூபா செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அடிப்படைச் சம்பளம் 700 ரூபாவாகும். ஈ.பி.எப். மற்றும் ஈ.ரி.எப். 105 ரூபா, வருகைக்கான கொடுப்பனவு 70 ரூபா, உற்பத்தி கொடுப்பனவு 75 ரூபா மற்றும் பறிக்கப்படும் மேலதிக தேயிலை கொழுந்துகளுக்கான கொடுப்பனவாக 75 ரூபா என்ற வகையில் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்துக்கு கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு இந்த மாதிரியின் கீழ் முறையாக சம்பளம் வழங்கப்பட்டால் அவர்களின் மாதாந்த வருமானம் 4,250 ரூபாவினால் அதிகரிக்கும். (ஐ-4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2194

**பவித்திரா**




**புவிதன்**




**பகீர்தன்**





**மோகனா**




**விதுர்சா**




**மதன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாகாண சபைகள் ஆளுநர்கள் வசம்; ஜனநாயகத்திற்கு முரணானது



(கொழும்பு)

மாகாண சபைகளின் நிர்வாகம் ஆளுநர்களினாலும், அரச அதிகாரிகளினாலும் முன்னெடுக்கப்படுவது ஜனநாயக கோட்பாட்டுக்கு முரணானது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை தேர்தல் குறித்து மாறுபட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. மாகாண சபை தேர்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருந்தால் மாகாண சபைக்கு எதிரான கருத்துக்கள் தற்போது தோற்றம் பெற்றிருக்காது.

மாகாண சபை தேர்தல் குறித்து அரசாங்கம் விரைவில் உறுதியான தீர்மானத்தை எடுக்கும். மாகாண சபை நிர்வாகம் ஆளுநர் உட்பட அரச அதிகாரிகளினால் முன்னெடுக்கப்படுவது ஜனநாயக கொள்கைக்கு முரணானது என்பதில் பொதுஜன பெரமுன கட்சி உறுதியாக உள்ளது.

தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு விற்பது அரசாங்கத்தின் கொள்கையல்ல. தேசிய வளங்களை கொண்டு வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்படுமே தவிர தேசிய வளங்கள் ஒருபோதும் விற்கப்பட மாட்டாது.

கடந்த அரசாங்கம் செய்த தவறை தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தால் மக்கள் ஜனநாயக ரீதியில் பாடம் புகட்டுவார்கள். ஆகவே மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக அரசாங்கம் ஒருபோதும் செயற்படாது எனத் தெரிவித்தார். (ஜ-4)

# சடலங்களை அடக்கம் செய்வதற்கு இரு பிரதேசங்களை தெரியப்படுத்தியுள்ளேன்



(கொழும்பு)

கொவிட்- 19 தொற்றினால் மரணிக்கும் சடலங்களை அடக்கம் செய்ய நிலத்தடி நீர் மிகவும் ஆழத்தில் இருக்கும் இரண்டு பிரதேசங்களை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரியப்படுத்தியுள்ளேன் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொவிட்- 19 தொற்றினால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்ய நிலத்தடி நீர் மட்டம் இல்லாத பிரதேசங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

கொவிட்- 19 தொற்றினால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் முஸ்லிம் உறுப்பினர்களுடனான சந்திப்பொன்று பிரதமர் தலைமையில் இடம் பெற்றது. இதற்கு எனக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதன்போது எனக்கு ஒரு விடயம் பாரப்படுத்தப் பட்டது. அதாவது, நிலத்தடி நீர் இல்லாத இரண்டு பிரதேசங்களை ஆராய்ந்து தெரிவிக்குமாறு பிரதமர் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் நிலத்தடி நீர் அளவு பூமிக்கு மிகவும் ஆழத்தில் இருக்கும் பிரதேசங்கள் இருக்கின்றதா?. அந்தப் பிரதேசங்கள் எங்கு இருக்கின்றன? என நான் எமது புவி விஞ்ஞான அதிகாரியிடம் கேட்டேன். அது தொடர்பில் ஆராய்ந்து அவர் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தார். அவரது அறிக்கையில் நிலத்தடி நீர் இல்லாத இரண்டு இடங்களை தெரி வித்திருந்தார். அந்த இரண்டு இடங்களிலும் 30அடி ஆழத்தில் நீர் இல்லை எனவும் அங்கு எந்தக் காலத்திலும் நீர் இல்லை எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்த இடங்களில் ஒன்று மன்னார் மாவட்டத்தின் மறிச்சுக்கட்டி பிரதேசமாகும். மற்றது கிழக்கு மாகாணத்தில் இறக்காமம் பிரதேசமாகும்.

அவரின் அறிக்கையை நான் தற்போது பிரதமருக்கும் சமர்ப்பித்திருக்கின்றேன். சுகாதார அமைச்சருக்கும் சமர்ப்பித்திருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சகுனமும் சங்கடமும்

ஒரு கடைக்குப் போனேன். ஐந்து ரூபாய் பணத்தை எடுத்துக் கொடுத்தேன். ஒரு தினசரி பத்திரிகையைக் கேட்டேன். அவர் உடனே அங்கே அடுக்கி வைத்திருந்த பத்திரிகையில் ஒன்றை எடுத்து என் கையில் கொடுத்தார்.

வாங்கிக்கொண்டேன். மீதி பணத்தை எடுத்தார். அதையும் என் கையில் கொடுக்க வேண்டும் அல்லவா? கொடுக்கவில்லை.

எதிரில் இருந்த பலகையிலே வைத்து எடுக்கச் சொன்னார்.

எப்பொழுதும் அவர் அப்படித்தான் செய்வார்.

நானும் எடுத்துக் கொண்டு வந்துவிடுவேன். இவர் ஏன் இப்படி செய்கின்றார் என்பது எனக்கு ரொம்ப நாளாக இருந்து வந்த ஒரு சந்தேகம். ஒரு நாள் அவரிடமே இதைக் கேட்டேன். ஏங்க.. நீங்கள் உங்கள் கடைக்கு வந்து பொருட்கள் வாங்குபவர்களுக்கு நீங்கள் மீதி சில்லறையை கொடுக்கின்ற பொழுது பலகையிலே வைத்துவிடுகின்றீர்கள். கையிலே கொடுக்க மாட்டேன் என்கின்றீர்களே ... ஏன் அப்படி? என்று கேட்டேன்.

காசை கையிலே கொடுத்தால் எங்களிடம் இருக்கின்ற லட்சுமி போயிடுவார் சேர் என்றார்.

அதாவது பணம் செலவாகிவிடும் என்று அர்த்தமாம். இன்னொரு நண்பர். அவர் ஒரு நாள் வழக்கத்துக்கு மாறாக மிகவும் சோகமாக உட்காந்திருந்தார்.

ஏங்க என்ன ஆகிவிட்டது.? ஏன் இப்படி கப்பல் கவிழ்ந்தது மாதிரி உட்காந்திருக்கின்றீர்கள் என்று கேட்டேன்.

கப்பலே கவிழ்ந்திருந்தால் கூட நான் இப்படி கவலைப்பட மாட்டேன் சேர்.. வேறு ஒன்று நடந்து போச்சு..என்றார்..

என்ன என்று கேட்டேன்.. என் உச்சந்தலையில் பல்லி ஒன்று விழுந்து விட்டது சேர் என்றார். அதற்காகவா இப்படி? என்று ஆச்சரியப்பட்டேன். ஆமாங்க... பல்லி உச்சந்தலையில் விழுந்தால் பலன் என்ன என்று பஞ்சாங் கத்திலே பார்த்தேன். மரணம் என்று போட்டிருக்கின்றது.. என்று சொல்லிவிட்டு அவர் தொடர்ந்து கவலைப்பட ஆரம்பித்துவிட்டார்.

இப்படியும் ஒருத்தர். என் கூட வேலை பார்க்கின்ற ஒருத்தர் எப்படி தெரியுமா? தினமும் வலது காலை வைத்துத் தான் அலுவலகத்துக்குள்ளே நுழைவார். என்றைக்காவது தவறுதலாக இடது காலை வைத்து உள்ளே வந்துவிட்டார் என்றால் அன்றைக்குப் பூராக மனது சங்கடப்படுவார். எந்த வேலையும் சரியாக ஓடாது.

கரம் போர்டு ஆடுகின்ற ஒருத்தர். எப்ப ஆட உட்காந்தாலும் ஸ்ட்ரைக்கரை கை தவறி கீழே விடுகின்ற மாதிரி உட்காருவாராம். ஏன் என்றால் எப்பவோ ஒரு தரம் நிஜமாகவே அது கைதவறி கீழே விழுந்திருகின்றது. அன்றைக்கு பிரமாத மாக ஜெயித்துவிட்டார்.. உடனே முடிவுக்கு வந்துவிட்டார்..கைதவறினால் இலாபம் என்று..அதன் பின்பு அதையே பழக்கமாக்கிக் கொண்டார்.

பூனை குறுக்கே போனால் சகுனம் சரியில்லை என்று நினைக்கின்றவர்கள் உண்டு. ஆனால் ஒருத்தர் எப்படி தெரியுமா? அவர் வெளியிலே கிளம்புகின்ற சமயம் பக்கத்து வீட்டு ரேடியோவிலே மியாவ் மியாவ் பூனைக் குட்டி என்று பாட்டு சத்தம் கேட்டாக் கூட போதும். சகுனம் சரியில்லை என்று பிரயாணத்தை கான்சல் செய்துவிடுவார்.

இவ்வளவும் எதற்குச் சொல்கின்றேன் என்றால்.. அளவுக்கு மீறின சகுன நம்பிக்கைகள் இருக்கின்றது பாருங்கள்..இதோடு பயமும் சேர்ந்து கொண்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். இது ஒருத்தருடைய மன நிலையை பாதித்துவிடும் என்கின்றது மனோ தத்துவ நிபுணர்களின் கருத்து.

வாழ்க்கையையே தடுமாற வைத்துவிடும். பாதுகாப்பில்லாத உணர்வு.. ஒருவிதமான டிப்ரெஷன் மனநிலை- இதெல்லாம் இதற்குக் காரணமாக அமையலாம். சிலபேரு காய்கறி நறுக்கக் கத்தியை கையிலே எடுத்தால் கூட நேரம் சரியாக இருக்கா என்று பார்த்துவிட்டுத்தான் வேலையை ஆரம்பிப்பார்களாம்.

அறிவு தான் மனதுக்கு வாத்தியாராக இருக்க வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கை நிம்மதியாக இருக்கும்.

அறிவு- மனது சொல்கின்ற படியெல்லாம் கேட்க ஆரம்பித்துவிட்டது என்றால் இடைஞ்சல் தான். ஒருத்தருக்கு ஏழாம் நம்பர் தான் இராசியான நம்பராம். ஏழாம் திகதி தான் எந்த காரியத்தையும் ஆரம்பிப்பார். ஏழு எழுத்து வருவது மாதிரி பேரை மாற்றி வைத்துக் கொண்டார்.

ஏழு மணிக்குத் தான் தினமும் எழுந்து கொள்வார். ஏழாம் நம்பர் வீட்டிலே தான் குடியிருக்கின்றார். கல்யாணம் கூட ஏழாம் திகதி தான் செய்து கொண்டார். அவர் ஒரு நாள் குதிரைப் பந்தயத்திற்கு போனார். குதிரையுடைய பேரை யெல்லாம் பார்த்தார். ஒரு குதிரையுடைய பேர் ஏழு எழுத்திலே அமைந்திருந்தது. ஏழு தானே இவருக்கு அதிர்ஷ்ட நம்பர் அதனால் உடனே அது மேலேயே பணத்தைக் கட்டினார்.

பந்தயம் நடந்தது..என்ன சேர் ஆகிவிட்டது என்று கேட்டார்கள். நான் பணம் கட்டிய அந்த என்னுடைய குதிரை ஏழாவதாக வந்து சேர்ந்தது சேர்.. என்றார் சோகமாக.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

32

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



1.அரச உத்தியோகத்தர்கள் வருகின்ற வாகனங்களை பாராளுமன்றத் தொகுதிக்குள் ஓட்டிவருதல். உத்தியோகபூர்வ அலுவல்களுக்காக பாராளுமன்றத்திற்கு வருகை தருகின்ற அனைத்து அரச உத்தியோகத்தர்களும் பயணிக்கின்ற வாகனங்களை பாதுகாப்பு அவசியப்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாக பாராளுமன்ற வளவுக்குள் ஓட்டிவரும் பொருட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அரச உத்தியோகத்தர்கள் வருகை தருகின்ற வாகனங்களை ஜயந்திபுர பிரதான நுழைவாயில் ஊடாக மாத்திரம் ஓட்டிவர முடியும்.

ஜயந்திபுர பிரதான நுழைவாயிலின் பாதுகாப்புச் சோதனைக் கூறில் அடையாளம்காணப்பட்ட பின்னர்வாகனம் மாத்திரம் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும். இங்கு வாகனத்தை விட்டு இறங்க வேண்டியது அவசியமற்றது.

ஆயினும், வருகை தருகின்ற வாகனத்தில் எடுத்து வரப்படுகின்ற அனைத்துப் பொருட்களும் பாதுகாப்பு சோதனைக்கு உள்ளாக்கப்படும். எனவே பாராளுமன்றத்தின் கடமைத் தேவைகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் தவிர்ந்த ஏனைய அத்தியாவசியமற்ற அல்லது எடுத்துவர பொருத்தமற்ற சாதனங்கள்/உபகரணங்கள்/பண்டங்கள்/பயணப் பைகள் போன்றவற்றை எடுத்து வருவதை இயலுமான வரை தவிர்த்துக்கொள்ளல் பாதுகாப்புச் சோதனைக்கு வசதியளிப்பதாக அமையும்.

மேற்படி பாதுகாப்புச் சோதனை நிறைவடைந்த பின்னர் பொலிஸ் உத்தியோகத்தர்களால் பாராளுமன்ற கட்டடத்தின் பொதுமக்கள் நுழைவாயிலை நோக்கி வாகனம் ஆற்றுப்படுத்தப்படும்.

பொதுமக்கள் நுழைவாயிலில் வாகனத்தை விட்டிறங்கிய பின்னர், உத்தியோகத்தர்கள் அரச உத்தியோகத்தர்களின் வரவேற்புக் கருமபீடத்திற்கும், சாரதியொருவருடன் வருகை தந்திருப்பின் வாகனத்தை நிறுத்தி வைப்பதற்காக ஜயந்திபுர வாகனத் தரிப்பிடத்துக்கு அல்லது ஏற்புடைய வாகனத் தரிப்பிடத்துக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

### திரும்பிச் செல்கையில் வாகனத்தை மீள அழைப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கடமைகள் முடிவடைந்ததன் பின்னர் பாராளுமன்றத் தொகுதியிலிருந்து வெளியேறுவதற்கு ஜயந்திபுர பிரதான நுழைவாயிலை அல்லது நுக செவன நுழைவாயிலை அல்லது பின்னியர நுழைவாயிலை உபயோகிக்கலாம்.

எவ்வாறாயினும், எவரேனும் ஓர் அரச உத்தியோகத்தர் தாமே வாகனத்தைச் செலுத்தி வந்தாராயின் வாகனத்தை ஜயந்திபுர வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தியதன் பின்னர் ஜயந்திபுர பிரதான நுழைவாயிலில் அமைந்துள்ள அனுமதிப்பத்திர கருமபீடத்துக்கு வர வேண்டும் என்பதுடன் அங்கு அடையாளத்தை உறுதிப்படுத்தும் தேவைப்பாடுகளை நிறைவு செய்த பின்னர் பாராளுமன்ற வளவுக்குள் பிரவேசிப்பதற்காக குறுகிய தூர பாராளுமன்ற பஸ் சேவையைப் பயன்படுத்தலாம்.

2. தற்காலிக நிற அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை பாராளுமன்றக் கட்டடத்துக்கு ஆற்றுப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள்.

அரச உத்தியோகத்தர்களின் வரவேற்பு கருமபீடத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள வரவேற்பு உத்தியோகத்தரிடம் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு, தனது தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது தனது நிறுவனப் பிரதானியினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ அடையாள அட்டையை சமர்ப்பித்தலும் படைக்கலச் சேவிதரினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றிருப்பின் அதை சமர்ப்பித்தலும் அவசியமானதாகும்.

அதன் பின்னர், உரிய தகவல்கள் பதியப்படுவதுடன் அடையாள ஆவணத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர், உரிய இடம் வரை செல்லுபடியான தற்காலிக நிற அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன் வெளியேறும்போது அதனைத் திருப்பி ஒப்படைத்துவிட்டு அடையாள ஆவணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

பாராளுமன்றக் கட்டடத்திற்குள் பிரவேசிக்கையில் அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களும் உடல் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதோடு அவர்கள் எடுத்து வரும் ஆவணங்களும் பயணப்பொதிகளும், பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும். பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்றக் கட்டடத்திற்குள் பிரவேசிக்கின்ற அனைவரும் உடல் சோதனைக்கு உட்படுத்தப்படுவதால் இதற்கு அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களும் பாதுகாப்புப் பிரிவினருக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பாராளுமன்ற வளவுக்குள் தங்கியிருக்கும் காலகட்டத்தினுள், பாராளுமன்றத்தினுள் நடைமுறைப்படுத்தப்டுகின்ற பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கேற்ப செயற்படுவது அவசியம் என்பதால் பாராளுமன்ற பணியாள் தொகுதியைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் பாராளுமன்ற பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது கடமையை நிறைவேற்ற ஒத்துழைப்பு நல்கும்படி அனைத்து அரசாங்க உத்தியோத்தர்களிடமும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

3. கையடக்கத் தொலைபேசி/மடிக்கணனி/டெப்லற் / ஐபோட் மற்றும் வேறு இலத்திரனியல் கருவிகளை பாராளுமன்ற கட்டடத்தினுள் எடுத்து வர அனுமதி வழங்குதல்.

அரசாங்க உத்தியோகத்தர்களின் கூடத்தினுள் கையடக்கத் தெலைபேசிகளை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது. ஆதலால், அக்கூடத்திற்கு செல்கின்ற உத்தியோகத்தர்கள் தமது கையடக்கத் தெலைபேசிகளை அரசாங்க உத்தியோகத்தர் வரவேற்பு கருமபீடத்திற்கு அருகாமையில் கடமையாற்றுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் ஒப்படைத்துச் செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அரசாங்க உத்தியோகத்தர்களின் கூடத்திற்குள் பிரவேசிப்பதை தவிர வேறு ஏதேனும் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக குழு அறைகளுக்கு வருகைதரும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தேவைப்படுவதாயின் மாத்திரம் தனது கையடக்கத் தொலைபேசியை பாராளுமன்ற கட்டடத்தினுள் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கலாம் என்பதோடு அதற்காக உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை படைக்கலச் சேவிதரிடம் சமர்ப்பித்தல் அவசியமாகும்.

தேவைக்கேற்றவாறு விண்ணப்பிக்கப்படும் பட்சத்தில் நடப்பு ஆண்டின் இறுதி வரையிலான காலப்பகுதிக்கு இந்த அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல் பற்றி பரிசீலிக்கப்படுவதுடன் பாராளுமன்றத்திற்கு வருகைதரும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அனுமதிப்பத்திரத்தை எடுத்து வருவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாக அநாவசியமான தாமதங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

பாதுகாப்பு தேவைகளுக்கு இசைந்தொழுகும் வகையில் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம், மடிக்கணனி/டெப்லற்/ஐபோட் போன்றவற்றை அரச உத்தியோகத்தர்களுக்கான கூட்டங்களுக்கு எடுத்து வருவதற்கு அனுமதி வழங்க இயலுமென்பதுடன் அவ்விடயத்தில் ஏற்புடைய விண்ணப்பப்படிவத்தை உரியவாறு பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

கடமைத் தேவையினை கருதி மடிக்கனணி/டெப்லெற்/ஐபோட் போன்றவற்றை அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் உபகரணத்தை பாராளுமன்ற குழுக்களுக்கு அல்லது வேறு குழுக்களுக்கு அல்லது கூட்டங்களுக்கு எடுத்து வருதல் தேவையாயின் அதற்கு அனுமதி வழங்க இயலுமென்பதுடன் அதற்காக உரிய விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி அனுமதி கோரல்களுக்கான சம்பந்தப்பட்ட அனுமதிகள் படைக்கலச் சேவிதர்/பிரதி படைக்கலச் சேவிதர்/உதவி படைக்கல சேவிதர் ஆகியோரினால் மாத்திரமே வழங்கப்படும்.

4. அரச உத்தியோகத்தர்கள் பல்வேறு தேவைகளுக்காக பாராளுமன்றத்திற்கு வருகை தருதல் அல்லது அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளுதல் அல்லது அது சம்பந்தமாக தகவல்களடங்கிய ஆவணங்களை அனுப்புதல்.

அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் சம்பந்தமாகவோ அல்லது பாராளுமன்றத்திற்கு வருகை தரும் உத்தியோத்தர்கள் சம்பந்தமாகவோ தகவல்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பும் போது 2777473 அல்லது 2777322 அல்லது 2777323 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் வாயிலாக அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமாக துரித கவனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றதென அன்புடன் அறியத் தருகின்றேன்.

எவ்வாறாயினும், பாராளுமன்ற குழுக்கள் அல்லது வேறு குழுக்கூட்டங்களில் பங்கேற்பதற்காக அல்லது வருகை தரும் உத்தியோகத்தர்கள் பற்றிய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட குழுவின் செயலாளரின்/சம்பந்தப்பட்ட குழுவிற்கான பணியகத்தின் உதவிப் பணிப்பாளரின் (நிர்வாகம்) விதப்புரையுடன் இத்தகவல்கள் அட்ங்கிய ஆவணங்களை படைக்கலச் சேவிதருக்கு சமர்ப்பித்தல் மிகவும் பொருத்தமானதும் அத்தியாவசியமானதுமான விடயமாகும். எனவே, குறித்த தகவல் பதிவேடுகளை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் ஊடாக படைக்கலச் சேவிதருக்குக் கிடைக்கச் செய்வது மிகவும் பொருத்தமாகும்.

சில அமைச்சுக்கள் / நிறுவனங்கள் மூலம் பாராளுமன்றத்திற்கு வருகை தருகின்ற உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்களை அல்லது அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் பற்றிய கோரிக்கைகளை அனுப்பும்போது, படைக்கலச் சேவிதர் அல்லது சம்பந்தப்பட்ட குழுவின் செயலாளர் அல்லது குழு அலுவலகம் என்பவற்றுக்கு குறிப்பிட்ட ஆவணங்களை அனுப்பி வைத்தல், ஒரே ஆவணத்தின் பல பிரதிகளை அல்லது பல ஆவணங்களை இடைக்கிடை அனுப்பி வைத்தல், சம்பந்தப்பட்ட கூட்டம் அல்லது கலந்துரையாடல் ஆரம்பமாவதற்கு மிகவும் அண்மித்த நேரத்தில் குறித்த ஆவணங்களை அனுப்பி வைத்தல், தகவல்கள் திருத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படாமல் திருத்தப்பட்ட ஆவணங்களை இடைக்கிடை அனுப்பி வைத்தல், பெயர், பதவி, தேசிய அடையாள அட்டை இலக்கம், வருகை தரும் வாகன இலக்கம் மற்றும் இதர அத்தியாவசிய தகவல்கள் முழுமை பெறாத ஆவணங்களை அனுப்பி வைத்தல்,

(தொடரும்...)

# மாகாண சபை தேர்தலை ஒத்திவைக்க தீர்மானம்


(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரச கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஜனாதிபதி தலைமையில் அரச கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே, நாட்டில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ்தொற்று நிலைமையைக் கருத்திற்கொண்டு மாகாண சபை தேர்தலை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் நாட்டுக்கு ஒரு மாகாண சபை அமைப்பு தேவை என்று அரச கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## திருநீறு எனும் மேலான செல்வம்

(தொடர்ச்சி)

• பிறப்பு, இறப்பு சூழலில் இருந்து நம்மை விடுவித்து முக்தி தருவது திருநீறு.

• நினைத்ததை அடைய வைக்கும் சக்தியைத் தருவது திருநீறு.

• நமது நிலையற்ற தன்மையை திருநீறு நமக்குத் தொடர்ந்து உணர்த்துகிறது.

• திருநீறு அணிந்தவர்களைக் காண்பவர்கள் இனிமை கொள்வார்கள்.

• மண் உயிர்களுக்கு உயர்வைத் தரும் ஆற்றல் உடையது திருநீறு.

• தொடர்ந்து திருநீறு பூசினால் அது ஆசைகளை நீக்கி உயர்ந்த நிலைக்குச் செல்ல வழிவகுக்கும்.

• முப்புரத்தை எரித்துச் சாம்பலாக்கியது திருநீறு.

இத்தகைய திருநீற்றை அணிவதால் வாழ்வில் செல்வசேர்க்கை உண்டாகும். எனவே தான் திருநீற்றை மேலான செல்வம் என்று நம்முன்னோர்கள் குறிப்பிட்டனர்.

தினமும் திருநீறு பூசினால் பாவங்களில் இருந்து விடுபடலாம். தொல்லைகள் எல்லாம் விலகி ஓடிவிடும்.

உடல் முழுக்க விபூதியைப் பூசி விபூதி குளியல் செய்வது மிகவும் நல்லது. இதை "சிமரா விரதம்" என்பார்கள்.

விபூதி அணியாமல் செய்யும் பிதுர் பூஜை, தேவர்கள் யாகம் மற்றும் சிவ பூஜை முழுமை அடையாது.

சிவநாமம் சொல்லி திருநீறு பூசிக் கொள்பவன் எந்தக் குலத்தில் பிறந்தாலும் அவன் போற்றத்தக்கவன் ஆகிறான். அவனைக் கண்ட மாத்திரத்தில் அருகில் வர எமனும் பயப்படுவான்.

எவன் ஒருவன் விபூதி பூசி நவக்கிரகங்களைச் சுற்றுகிறானோ அவனுக்கு அனுகூலம் உண்டாகும். திருநீறு பூசி வந்தவனுக்கு யார் ஒருவர் அன்னமிடுகிறார்களோ அவருக்கு அசுவமேத யாகம் செய்த பலன்கள் கிடைக்கும்.

ஆலயங்களில் வழங்கப்படும் திருநீறு செல்வத்தை வழங்கும் சக்தி கொண்டிருப்பதால் தான் அதை விபூதி என்று அழைக்கிறோம். "பூதி" என்றால் செல்வம் என்று அர்த்தமாகும். ஆலயத் திருநீறு நம் பாவங்களைப் பஷ்பமாக்குவதால் அதை பஷ்பம் என்றும் ஆன்மீக ஒளியை வளர்ப்பதால் பசிதம் என்றும் ஆபத்துகளில் இருந்து காப்பதால் ரட்சை என்றும் சொல்கிறோம். எனவே யாருடைய நெற்றியில் திருநீறும் குங்குமமும் பளிச்சிடுகிறதோ அவர்களை ஒருநாளும் வறுமை தாக்காது என்பது உறுதி. ஆலயத் திருநீற்றை தினமும் காலையில் நீரில் கலக்கிக் குடித்து வந்தால் எந்த நோயும் வராது.

நமது வீட்டுக்கு யார் வந்தாலும் ஆலய திருநீறால் அவர்களை வாழ்த்தினால் விருந்தினரின் மனம் குளிரும். அதுபோல விருந்தினர்களை வழியனுப்பும் போதும் திருநீறு கொடுப்பது மிகவும் நல்லது.

திருமுருக கிருபானந்தவாரியார் எந்த ஊருக்குச் சென்றாலும் தன்னை நாடி வரும் அத்தனை பேருக்கும் திருநீறு கொடுப்பார். திருநீற்றை அவர் அழகுத் தமிழில் "தாம்பூலம்" என்றே சொல்வார். ஒரு தடவை கிருபானந்தவாரியாரிடம் ஒரு இளைஞன் "நெற்றியில் ஏன் இப்படி வெள்ளை அடித்து இருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அவன் குரலில் கேலியும் கிண்டலும் நிறைந்திருந்தது.

அவனிடம் வாரியார் மிகவும் பொறுமையாக "நல்ல சுவருக்குத் தான் வெள்ளை அடிப்பார்கள். குட்டிச் சுவருக்கு அடிக்க மாட்டார்கள். நான் நல்ல சுவர். அதனால் தான் எனக்கு வெள்ளை அடிக்கப்பட்டுள்ளது. நீ குட்டி சுவர் என்பதால் வெள்ளை அடிக்கவில்லை" என்றார்.

கேள்வி கேட்ட இளைஞன் வெட்கத்தில் தலை குனிந்து அங்கிருந்து சென்றுவிட்டான்.

எனவே திருநீறின் சிறப்பையும் மகிமையையும் உணருங்கள். தினமும் திருநீறு பூசுங்கள். இறைவன் அருள் முழுமையாகக் கிடைக்கும்.

சிவாலயங்களில் விபூதி தருவது போல் வைணவத்தலங்களில் பிரசாதமாகத் துளசியும் துளசி தீர்த்தமும் தருகிறார்கள்.

விபூதி, தீர்த்தம் பெற்ற பிறகு பிரகாரங்களை வலம் வர வேண்டும். அது பற்றி அடுத்துக் காணலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## ஒன்பது நாட்களில் 39 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் நேற்றுக் காலை 6 மணி வரையான காலப்பகுதியில் இந்நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 39 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த காலப்பகுதியில் 527 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறான விபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்காக பொலிஸாரினால் விசேட நடவடிக்கைகள் குறித்த காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், வாகன விபத்துக்களில் அதிகளவாக பாதசாரிகள், மோட்டார் சைக்கிள் சாரதிகள் மற்றும் ஆட்டோ சாரதிகள் உயிரிழப்பதாக சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## கழுத்தை நெரித்தார் அதுதான் சுட்டோம்

### பொலிஸார் விளக்கம்

(கொழும்பு)

வெயாங்கொடை - ஹல்கம்பிட்டிய பிரதேசத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் பலியான சந்தேகநபரது நீதவான் பரிசோதனை நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது வத்துபிட்டிவல வைத்தியசாலையின் பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது சடலத்துக்கான மரணப் பரிசோதனை இன்று மேற்கொள்ளப்படவுள்ளது. நிஷாந்த குமாரசிறி என்ற குறித்த நபர், போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கிய ஒருவரை தாக்கிக்காயப்படுத்திய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் ஏலவே கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக நேற்று முன்தினம் அதிகாலை வெயாங்கொடை - ஹல்கம்பிட்டிய பிரதேசத்துக்கு அழைத்துச் சென்ற போது, கைவிலங்கினால் பொலிஸ் அதிகாரி ஒருவரின் கழுத்தை நெரித்துள்ளார்.

இதன்போது பொலிஸார் அவரை சுட்டுக்கொன்றதாக பொலிஸார் விளக்கமளித்தனர். (ஜ-4)

## 3 ஆயிரத்து 739 மெற்றிக்தொன் வெற்றிலை ஏற்றுமதி

(கொழும்பு)

இந்த வருடம் ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரையில் 3,739 மெற்றிக் தொன் வெற்றிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ரூபாய் 2,792 மில்லியன் அந்நியச் செலாவணியைப் பெற்றிருப்பதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 4,677 மெற்றிக் தொன் வெற்றிலையை ஏற்றுமதி செய்திருந்ததுடன், ரூபா 3,406 மில்லியன் அந்நியச் செலாவணியை ஈட்டியிருந்தது.

இந்நாட்டின் வெற்றிலை உற்பத்தியில் 95 வீதமானவை பாகிஸ்தானுக்கும், அதற்கு மேலதிகமாக மத்திய கிழக்கு நாடுகள், ஜப்பான், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஆனந்த சுபசிங்க தெரிவித்துள்ளார். (ஜ-4)

## 100 கடைகள் மூடல்

(கம்பளை)

கொரோனா அச்சம் காணமாக கம்பளை நகரில் 100 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் நேற்று முதல் மூடப்பட்டுள்ளன.

மேற்படி வர்த்தக நிலையங்களுக்கு வியாபார நிமித்தம் வந்து சென்ற பிஸ்கட் கம்பனியொன்றின் விற்பனை முகவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்தே அந்த பிரதிநிதி வந்து சென்றதாக தெரிவிக்கப்படும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அவ்வாறு இனங்காணப்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் அங்கு தொழில் புரிந்தவர்களும் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)



# சிறுவர் அரங்கம்

## தற்பெருமை



ஒரு தடவை முல்லா ஒரு குளக்கரை ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது வழியில் இருந்த ஒரு கல் தடுக்கி குளத்தில் விழ அவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு மனிதர் பாய்ந்து வந்து முல்லாவைக் குளத்தில் விழாமல் காப்பாற்றினார். முல்லா அவருக்கு நன்றி சொல்லி விட்டுப் போய்விட்டார்.

ஆனால் முல்லாவைக் காப்பாற்றியவரோ சும்மா இருக்கவில்லை. முல்லாவை எந்த இடத்தில் யாருக்கு நடுவே சந்தித்தாலும் "குளத்தில் விழ இருந்த முல்லாவை நான்தான் காப்பாற்றினேன்" என்று சொல்லத்தொடங்கி விட்டார்.

அவருடைய தற்பெருமைப் பேச்சைக் கேட்டுக் கேட்டு முல்லாவுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. அவருக்கு தகுந்த நேரத்தில் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

ஒருநாள் பழைய குளக்கரைப் பக்கம் சனநடமாட்டம் அதிகமாக இருந்தது. அந்தப் பக்கம் வந்த முல்லா அந்த தற்பெருமைக்காரர் குளக்கரையில் யாரோ ஒருவருடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

திடீரென முல்லா குளத்தினுள் பாய்ந்து விட்டார். முல்லா குளத்தில் விழுந்து விட்டார் என நாலாபுறமிருந்த மக்களிடமிருந்து கூக்குரல் எழுந்தன.

பலர் முல்லாவைக் காப்பாற்றுவதற்காக குளத்தில் இறங்கினர்.

முன்னர் முல்லாவைக் குளத்தில் விழாமல் காப்பாற்றியவரும் அவசர அவசரமாகக் குளத்தில் இறங்கினார்.

முல்லாவோ யாரைப் பற்றியும் கவலைப்படாமல் குளத்தில் நீச்சலடித்து விளையாடிக் கொண்டிருந்தார். முல்லாவுக்கு நீந்தத் தெரியும் என்ற விடயம் இதுவரை யாருக்குமே தெரியாது.

முல்லா முன்னர் தம்மைக் காப்பாற்றியதாக தற்பெருமை பேசும் மனிதரைச் சுட்டிக் காண்பித்து " என் அருமை நண்பரை உங்களுக்கெல்லாம் அறிமுகப் படுத்த நினைக்கிறேன்.

நீந்தத் தெரிந்த என்னை இந்தக் கனவான் ஒரு தடவை நீரில் மூழ்கி விடாமல் காப்பாற்றி பேருதவி செய்தார் " என்றார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்




போர் வீரனாக நாட்டின் அரசனாக மட்டும் அல்லாமல் கலாசாரத் தூதுவனாகவும் செல்ல வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாக இருப்பதால் வீரர்களோடு வரலாற்று ஆய்வாளர்கள், புவியியல் வல்லுநர்கள், அரசியல் விற்பன்னர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் படைப்பாளிகள், இலக்கியவாதிகள், புலவர்கள், புள்ளியியல் நிபுணர்கள், ஓவியர்கள், தளவரைவாளர்கள் (சர்வேயர்கள்) என்று சகல தரப்பினரையும் அழைத்துச் செல்வதற்கு முடிவு செய்திருக்கிறேன்.

அவர்களைத் தேடிச் சென்று விடயத்தைச் சொல்லி சம்மதிக்க வைத்து அழைத்து வர வேண்டியது உங்களுடைய கடமை.

சொல்லி முடித்தார் அலெக்சாண்டர். அதற்கான ஏற்பாடுகள் விறுவிறுவென நடக்கத் தொடங்கின. சகல துறைகளின் சான்றோர்களும் அலெக்சாண்டர் முன் அழைத்து வரப்பட்டனர்.

வந்தவர்களுக்கு ஏராளமான பரிசுகளைக் கொடுத்துச் சந்தோஷப் படுத்தினார். சான்றோர்களின் குடும்பத்தினருக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்து தருவதற்கு ஆண்டிபேட்டருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

ஆசியப் பயணத்தைத் தொடங்கிய போது அலெக்சாண்டரின் படையில் முப்பதாயிரம் காலாட்படை வீரர்கள். ஐயாயிரத்து நூறு குதிரைப் படை வீரர்கள் இருந்தார்கள்.

கி.மு. 334 மே மாதம். பலம் பொருந்திய குதிரைப் படை முன்னால் நின்று கொண்டிருந்தது. அதன் இருமருங்கிலும் காலாட்படையின் இரு பிரிவுகள்.

பருந்துப் பார்வையில் பார்த்தால் சதுரங்கக் காய்கள் போன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈட்டிகள் மட்டுமே தெரியும். (தொடரும்)

ஆசையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற 'ஆசை' எனக்கிருக்க, 'எனக்கு ஓர் ஆசையும் கிடையாது' என்று எப்படிக் கூறுவேன்? – நாஜ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் உலக மக்களுக்கான படிப்பினை

கடவுள் உனக்குத் தர நினைத்ததை எந்த மனிதனாலும் தடுத்து விட முடியாது. கடவுள் உனக்குத் தர நினைக்காததை எந்த மனிதனாலும் தந்துவிட முடியாது. இதுவே உண்மைத் தத்துவம்.

ஆம், நீ மறுத்தாலும் உனக்குக் கிடைக்க வேண்டியது கிடைத்தேயாகும். அவ்வாறு கிடைக்காவிட்டால், அதற்காக வருந்துதல் வேண்டாம். கிடைப்பனவு அதுவே என்று நினைப்பதே அறிவுடைமை.

மிகப்பெரிய சர்க்கரை ஆலை வைத்திருக்கும் தொழிலதிபர் தன் ஆலையில் உற்பத்தியாகும் சர்க்கரையில் ஒரு சிறு துரும்பைக்கூட வாயில் போட முடியாது என்றால் அதுதான் அளப்பனவு.

ஆக, கடவுள் நமக்கு அளந்ததை பக்குவமாக ஏற்றுக் கொண்டு வாழ்வதுதான் புத்திசாலித்தனம்.

இதைவிடுத்து அதுவும் வேண்டும். இதுவும் வேண்டும் என்றால் அது பேராசையின் பாற்பட்டதாகிவிடும்.

இதற்கு சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் நல்லதோர் உதாரணம்.

நடிகர் ரஜினிகாந்த் நடிப்புலகில் கொடி கட்டிப் பறப்பவர். அவரின் நடிப்பால் தமிழக மக்கள் உச்சமான மதிப்பை, மரியாதையை அவர் மீது வைத்திருந்தனர்.

இதற்கு மேலாக, நடிகர் ரஜினிகாந்திடம் இருந்த ஆன்மீக நாட்டம் அவர் மீதான மரியாதையை மென்மேலும் உயர்த்திக் கொண்டது.

இருந்தும் ஏனோதெரியவில்லை அரசியலில் இறங்க வேண்டும் என்ற ஆசை ரஜினிகாந்தைப் பற்றிக் கொண்டது.

அரசியலில் புதிய கட்சியை ஆரம்பித்து தமிழக சட்ட சபைத் தேர்தலில் களமிறங்குவதற்கு ரஜினிகாந்த் தயாரானபோது; அவர் ஒரு தமிழன் அல்ல. மராட்டியர். அவர் எப்படி தமிழகத்தில் அரசியல் செய்ய முடியும் என்ற கேள்விக் கணைகள் தமிழகம் முழுவதிலும் பூதாகரமாக எழுந்தன.

நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் மற்றும் நாஞ்சில் சம்பத், நடிகர் பிரகாஸ்ராஜ், நடிகர் சத்யராஜ் என ஏகப்பட்டவர்கள் சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்தை வறுத்தெடுத்தனர்.

இதில் சீமானும் நாஞ்சில் சம்பத்தும் ரஜினியை விமர்சித்த சொற்பிரயோகங்களைப் பார்த்தபோது ரஜினியை தலையில் வைத்து போற்றிய தமிழகம் இப்போது அவரைக் கீழே போட்டு காலால் மிதிப்பது தெரிந்தது.

இஃது யார் தவறு. தமிழக மக்கள் ரஜினியை மறந்து செயற்படுகின்றனரா? அல்லது தமிழக மக்கள் தனக்குத் தந்த உயர் மதிப்பை நடிகர் ரஜினிகாந்த் தக்கபடி காப்பாற்றத் தவறிவிட்டாரா? என்று சிந்தித்தபோது தான்,

தமிழகத்தில் சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்துக்கான மதிப்பும் மரியாதையும் அவரின் நடிப்புக்கும் ஆன்மீக நாட்டத்துக்குமானதேயன்றி வேறில்லை என்பது தெரிந்தது.

என்ன செய்வது எவ்வளவு உச்சமான மதிப்போடு இருந்த ரஜினிகாந்த் தேவையில்லாமல் அரசியலுக்குள் மூக்கை நுழைக்கப் போய், மானம் மரியாதை எல்லாவற்றையும் இழந்து நின்றபோது; நடிப்பில் மன்னனாக இருப்பாய் என்ற கடவுளின் வரத்தை ரஜினிகாந்த் துஷ்பிரயோகம் செய்துவிட்டார். இனி அவரின் மனநிலை வேறுவிதமாகவே இருக்கும்.

ஆனாலும் அவருக்கு நேர்ந்த கதி உலக மக்களுக்கு நல்லதோர் படிப்பினை என்பது தான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

# மாகாண சபை தேர்தல் தொடர்பில் அரசு உறுதியான தீர்மானம் எடுக்கும்

## பெரமுன பொதுச் செயலாளர் சாகர காரியவசம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசாங்கம் விரைவில் உறுதியான தீர்மானத்தை எடுக்கும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மாகாண சபை நிர்வாகம், ஆளுநர் உட்பட அரச அதிகாரிகளினால் முன்னெடுக்கப்படுவது ஜனநாயக கொள்கைக்கு முரணானது என்பதில் பொதுஜன பெரமுன கட்சி உறுதியாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து. மாறுபட்ட பல கருத்துக்கள் வெளிவருகின்றன. மாகாண சபைத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருந்தால் மாகாண சபைக்கு எதிரான கருத்துக்கள் தற்போது தோற்றம் பெற்றிருக்காது.

இதேவேளை தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு விற்பது அரசாங்கத்தின் கொள்கையல்ல. தேசிய வளங்களை கொண்டு வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்படுமே தவிர தேசிய வளங்கள் ஒருபோதும் விற்கப்படமாட்டாது.

கடந்த அரசாங்கம் செய்த தவறை தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தால் மக்கள் ஜனநாயகரீதியில் பாடம் புகட்டுவார்கள். ஆகவே மக்கள்வழங்கிய ஆணைக்கு எதிராக அரசாங்கம் ஒருபோதும் செயற்படாது என்றார். (ம-3)

# 2 இலட்சம் சுயதொழில் வாய்ப்புகளை அடுத்த ஆண்டு உருவாக்க தீர்மானம்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு 2 இலட்சதிற்கு மேற்பட்ட சுயதொழில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக பொருளாதார மறுமலர்ச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று (செவ்வாய்க் கிழமை) சமுர்த்தி முகாமையாளர்களுடன் இடம் பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த சந்திப்பின்போது சமுர்த்தி. பொருளாதார, நுண் நிதி, சுயதொழில் மற்றும் வர்த்தக அபிவிருத்தி தொடர்பிலும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்தோடு 2021 வரவு - செலவு திட்டங்களை கிராமப்புற அளவில் செயற்படுத்துவதில் சமுர்த்தி திணைக்களத்திற்கு விசேட பொறுப்பு உள்ளது என்றும் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு சமுர்த்தி பெறுநர்களின் ஜீவனோபாய மார்க்கத்தை. கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கொண்டு வரும் வேலைத்திட்டத்தில் இணைந்து பணியாற்றுமாறும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ம-3)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### நாவடக்கம் மிக அவசியம்

❖ ஒரு மனிதன் எந்தச் சூழ்நிலையிலும் பொதுவாகச் சிந்தித்து நடுநிலையோடு வாழ்வது சிறந்தது. ஒரு நல்ல மனிதனுக்குரிய உயர்ந்த தகுதி நடுநிலையாளராக இருப்பது தான். நல்லவர்கள் செல்வநிலையிலும், ஏழ்மைநிலையிலும் நடுநிலைமையிலிருந்து தவறமாட்டார்கள்.

❖ அனைத்து செல்வங்கள் இருந்தபோதிலும், ஒழுக்கம் இல்லை என்றால் ஒருவனுக்கு பெருமை இல்லை. உயிரை விடவும் ஒழுக்கம் மேலானது. நல்ல ஒழுக்கம் கொண்டவர்கள் தவறியும் பிறரைப் பழித்துப் பேசமாட்டார்கள்.

❖ பட்டினி கிடந்து விரதம் மேற்கொள்பவர்களைக் காட்டிலும் பிறர் செய்யும் குற்றங்களைப் பொறுத்துக் கொள்பவர்கள் மேலானவர்கள். ஆசைகளைத் துறந்த துறவிகளை காட்டிலும் பொறுமையுடையவர்கள் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுவர்.

❖ தனக்குத் தானே கேடு விளைவித்துக் கொள்ள பகைவனோ, வேறு எதுவோ தேவையில்லை. பொறாமை என்ற ஒன்றே போதும். பிறர் செய்யும் தர்மங்களைக் கண்டு பொறாமை கொள்பவர்களின் குடும்பம் சிதைந்து ஏழ்மைநிலையை அடையும்.

❖ அடக்கமுடைய மனிதன் வாழ்வில் உயர்வடைகிறான். அவன் தேவர்களுக்கு ஒப்பானவன். எதையும் அடக்காவிட்டாலும் மனிதன் தன் நாக்கையாவது அடக்க வேண்டும்.

# இன்றும் நாளையும் விசேட சுற்றிவளைப்பு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படும் நபர்கள் தொடர்பில் இன்றும் நாளையும் விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக ஏற்கனவே 1927 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுள் 1800 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக நேற்று காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த அக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இது வரையில் 1927 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இன்று முதல் நாளை வியாழக்கிழமை வரை விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கு புறம்பாக கொண்டாட்ட நிகழ்வுகள் மற்றும் விருந்துபசாரங்களில் கலந்து கொள்ளும் நபர்களுக்கு எதிராக இதன்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதனால் எந்த நிகழ்வுகளாக இருந்தாலும், தமது குடும்பத்தினருடன் மாத்திரம் இணைந்து தங்களது வீடுகளிலேயே கொண்டாடுங்கள். இந்நிலையில் கூட்டம் கூடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என வலியுறுத்தினார். (ம-3)

# சிதம்பர தரிசனம்



ஈழத்துச் சிதம்பரத்தில் (2020.12.30) திருவெம்பாவை 10ஆம் நாள்


### ஆருத்ரா தரிசனம் காணாத கண்ணென்ன கண்ணே!

தில்லையில் ஆனந்த தாண்டவம் ஆடிய பெருமான்
திருவாவூரில் அஜபா தாண்டவம் ஆடிய பெருமான்
திருவாலங்காட்டில் ஊத்துவ தாண்டவம் ஆடிய பெருமான்
திருப் புத்தூரில் கவுரி தாண்டவம் ஆடிய பெருமான்
பூண்டியில் பிரம தாண்டவம் ஆடிய பெருமான்
ஆண்டிகேணி ஐயனுடன் காரையில் களி தாண்டவம் ஆடுகிறான்
வேண்டித் துதிப்போர்க்கு ஆருத்ரா தரிசனம் அளிக்கின்றான்
விடமுண்ட கண்டனாய் வீடளிக்கும் பெருமானானான்

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை



சிம்ம இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று 6 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 6 ஆம் இடம் என்பது எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிப்பதாகும். உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். எதிரிகள் ஸ்தானாதிபதி, எதிரிகள் ஸ்தானத்திலேயே இப்பொழுது சஞ்சரிப்பதால் எதிர்ப்புகள் விலகும். பகை பாராட்டியவர்கள் பாசம் காட்ட முன்வருவர். ஜீவன ஸ்தானமாகவும் அது கருதப்படுவதால் உத்தியோகம் மற்றும் தொழிலில் உங்கள் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். மகர இராசியில், ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு பகவான் இருக்கின்றார். அவரோடு இப்பொழுது சனி இணைவதால் 'நீச்ச பங்க இராஜயோகம்' ஏற்படுகின்றது. சப்தமாதிபதியாகவும் சனி விளங்குவதால், குடும்பப் பிரச்சினைகள் அவ்வப்போது வரத்தான் செய்யும்.

## ஆறில் வருகிறது சனி, அனைத்திலும் வெற்றி இனி!

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

#### எதிரிகளின் பலம் குறையும்

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தை அடையும் சனி பகவானால், தொழில் மற்றும் உத்தியோகத்தில் நற்பலன்கள் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும்.

#### சனியின் பார்வை பலன்கள்

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை, 3, 8, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. அதன்படி சகோதரம், சகாயம், வழக்குகள், உடல்நலம், இழப்புகள், இடமாற்றங்கள், தூரதேசப் பயணங்கள், விரயங்கள், கடன் சுமை, ஆயுள் விருத்தி, நீங்காப் பகை, ஏமாற்றம், புனிதப்பயணங்கள், மூதாதையர் சொத்துக்கள் சம்பந்தப்பட்டவைகளை குறிக்கும் இடங்களில் சனியின் பார்வை பதிவதால், அந்த ஆதிபத்யங்களில் மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரலாம். 3 ஆம் இடத்தை சனி பார்ப்பதால் உடன்பிறப்புகளின் பகை அகலும். சொத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சனியின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவதால் சிறுசிறு ஆரோக்கியத் தொல்லைகள் வந்து அலைமோதும்.

சனியின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால், திடீர் திடீரென பயணங்கள் ஏற்படும். வாடகை வாகனத்தில் உலா வந்த நீங்கள், இனி சொந்த வாகனம் வைத்துக்கொள்ள வாய்ப்புகள் கைகூடிவரும்.

#### சனியின் பாதசாரப் பலன்கள்

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, சந்தோஷ வாய்ப்புகள் ஏராளமாக வந்து சேரும். சிந்தித்த காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். சனி பகவான், உங்கள் இராசிநாதனான சூரியன் காலில் சஞ்சரிப்பதால் பிரகாசமான எதிர்காலம் உங்களுக்கு வந்து சேரும். மனையில் மங்கல ஓசையும் மழலையின் ஓசையும் கேட்கும்.

28.12.2021 முதல் 26.01.2023




வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, சுபவிரயங்கள் அதிகரிக்கும். விரயாதிபதியாக சந்திரன் விளங்குவதால் இக்காலத்தில் வீட்டுப் பராமரிப்புச் செலவுகளை மேற்கொள்ளலாம். அசையாத சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் இருந்த தடை அகலும்.

27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, மனைகட்டிக் குடியேறும் யோகம் உண்டு. குடும்ப உறுப்பினர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலை கிடைத்து குடும்ப வருமானம் உயரும். செவ்வாய் உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமாவார். எனவே பூமி விற்பனை தொழில் செய்பவர்களுக்கு, பொருளாதார நிலை நினைக்க இயலாத அளவு உயரும். இக்காலத்தில் சனியும் கும்ப இராசிக்குச் செல்கின்றார். கண்டகச்சனியாக இருந்தாலும் கும்பம் அவருக்குச் சொந்த வீடு என்பதால் கெடுபலன்களை கொடுக்கமாட்டார். புது முயற்சிகளில் தாமதம் உருவாகலாமே தவிர, காரியம் கடைசி நேரத்தில் கைகூடி விடும்.

#### குருப்பெயர்ச்சிக் காலம்

கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு ஏழாமிடத்தில் வருவதால், அதன் பார்வை பலம் உங்களுக்கு மிகுந்த நற்பலன்களை வழங்கும். ஆரோக்கியம் சீராகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது சுபகாரியங்கள் முடிவடையும். பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் உண்டு. வருமானம் இரு மடங்காக உயரும்.

#### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

21.03.2022 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின்போது, மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். எனவே உங்கள் இராசிக்கு பாக்கிய ஸ்தானம் பலப்படுகின்றது. இதனால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். கேது மூன்றில் இருப்பதால் சகோதரர்களிடையே ஒற்றுமை குறையலாம். கூட்டு வியாபாரம் செய்த உடன்பிறப்புகள் தனித்தியங்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பர்.

08.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின்போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். அஷ்டமத்தில் ராகு வருவதால் ஆதாயத்தைக் காட்டிலும் விரயங்கள் கூடலாம். இருப்பினும் குரு வீடாக இருப்பதால் சுபவிரயங்களே அதிகரிக்கும். கேது சஞ்சாரத்தால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். இக்காலத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

#### வெற்றி பெற வைக்கும் வழிபாடு

ஞாயிற்றுக்கிழமை தோறும் விரதமிருந்து சிவபெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இல்லத்துப் பூஜை அறையில் சிவ குடும்ப படம் வைத்து திருவாசகம் படித்து வழிபடுவது நல்லது. வாழ்க்கை வளமாக அமையும்.

#### சனியின் வக்கிர காலம்

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022 முதல் 09.10.2022 வரை, 27.06.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகின்றார். தொழில் உத்தியோகத்தில் மிகுந்த முன்னேற்றம் ஏற்படும். எதிரிகளின் பலம் குறையும். வண்டி, வாகன வசதிகள் பெருகும். உத்தியோகத்தில் நினைத்த இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் நடைபெறாமல் போகலாம். அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது.



#### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இந்த சனிப்பெயர்ச்சி நன்மை தரும் பெயர்ச்சியாகவே அமைகின்றது. குடும்ப வருமானம் உயரும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் யோகமும் ஒரு சிலருக்கு உண்டு. உறவினர் பகை மாறும். உள்ளத்தில் தெளிவும் உற்சாகமும் கொண்டு காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய் வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகளில் ஒருசிலர் மட்டும் உதவியாக இருப்பர்.

பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். பணிபுரியும் பெண்களுக்கு உயர் பதவி கிடைக்கலாம். அதுமட்டுமல்லாமல் வீடு மற்றும் வாகனம் வாங்க சலுகைகளும் கிடைத்து சந்தோஷம் காண்பர். (தொடரும்)

## வடமராட்சி...

இச்சம்பவத்தில் கரணவாய் பகுதியைச் சேர்ந்த சந்திரமோகன் சஜிந்தன் (வயது-29), சண்முகம் சிவஞானசுந்தரம் (வயது - 55), தேவராசா ரஞ்சிதா (வயது-35) ஆகியோரே வெட்டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

படுகாயமடைந்த அனைவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## ஆற்றில் நீராடச்...

கிழமை மாலை காணாமல் போயுள்ளார்.

மன்னார் அரிப்பு பாலப்பகுதியின் கீழ் அருவி ஆற்றில் நீராட சென்ற ஐந்து கிராம சேவகர்கள் உட்பட 6 பேர் நீராடியுள்ளனர்.

இதன்போது அதிக நீர் வரத்து காரணமாக கிராம அலுவலர் ஒருவர் நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளார்.

குறித்த கிராம சேவையாளர் இதுவரை மீட்கப்படாத நிலையில் அவரை தேடும் நடவடிக்கையில் கடற்படையினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து ஈடுபட்டுள்ளனர். (ம-3,285)

## நல்லூர் பிரதேச...

தின் தேசிய அமைப்பாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கு யாரை நிறுத்துவது என இறுதித் தீர்மானம் எடுக்கும் கூட்டம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## 2024 ஜனாதிபதி...

யின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

2024 ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே எமது தரப்பு வேட்பாளரின் பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். கட்சி மற்றும் கூட்டணியின் தலைவர்தான் வேட்பாளராக களமிறங்குவது சம்பிரதாயம்.

அந்தவகையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸ பதவி வகிக்கின்றார். எதிர்காலத்தில் அமையவுள்ள கூட்டணியின் தலைவராகவும் அவரே செயற்படுவார். எனவே, சஜித்தான் ஜனாதிபதி வேட்பாளர் என்பது தெளிவு என்றார். (ம-3)

## மோட்டார் சைக்...

13 பவுண் தாலிக்கொடி அறுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அச்சுவேலி வல்லைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலி வல்லைப் பகுதியில் குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியை இழுத்து அறுத்து சென்றுள்ளனர்.

இதனால் மோட்டார் சைக்கிளிலிருந்து தாயும் மகளும் நிலத்தில் விழுந்து காயம் ஏற்பட்டுள்ளது

அறுக்கப்பட்ட தாலிகொடியின் நிறை 13 பவுண் என தெரிவிக்கப்படுகிறது. காயம் ஏற்பட்ட தாயும் மகளும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-3,60)

## ஐ.நாவில் இலங்...

இடம்பெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடர் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ஏற்கனவே மூன்று தடவைகள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன. அதனால் தமிழர் தரப்புக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை.

கூட்டமைப்புடன் ஒத்துப்போவதாக அறிவிக்கப்பட்ட அரசாங்கத்தினால் கூட எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

தற்போதைய அரசாங்கமானது ஜெனிவா மனித உரிமை கூட்டத்தொடரின் தீர்மானத்துடன் ஒத்துப்போக முடியாது என இவ்வருட ஆரம்பத்திலேயே அறிவித்து விட்டது.

இதன் காரணமாக மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதைக் காட்டிலும் அதற்கு அப்பால் செல்ல வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இவ்விடயம் மனித உரிமைகள் பேரவையின் கரங்களில் இருந்து வெளியே போகக் கூடாது. சர்வதேச அரங்கில் இது தொடர்ச்சியாக பேணப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

மனித உரிமைகள் பேரவையிலிருந்து போர்க்குற்ற விவகாரம் அகற்றப்பட வேண்டும் என வெளிப்படையாக கோரிக்கை விடுப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களது கருத்தை நான் வெகுவாக மதிக்கிறேன். ஏனெனில் அவர்கள் தமது கருத்தை வெளிப்படையாக சொல்கிறார்கள்.

மனித உரிமைகள் பேரவையில் இவ்விடயம் தொடர்ந்தும் இருக்க வேண்டும். ஆனால் கால அவகாசம் வழங்கப்படக் கூடாது எனக் கூறும் பெரும்பான்மையினரின் கருத்து எனக்குப் புரியவில்லை என்றார். (ம-3,100)

## யாழில் ஒரே...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் மருதனார்மடம் கொரோனா வைரஸ் கொத்தணி 118 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3,18)

## மேலும் ஒரு...

என்று அரச தகவல் திணைக்களம் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 195ஆக உயர்வடைந்துள்ளது.

வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு கோவிட் - 19 நோயால் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், நாட்டில் நேற்று 453 பேர் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 42 ஆயிரத்து 56 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## யாழ்...

யாழ்.மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் 2 தடவைகள் தோல்வியடைந்ததால் அதன் முதல்வர் பதவியிலிருந்து ஆனல்ட் வெளியேற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் மீண்டும் இன்று புதிய முதல்வர் தெரிவு முன்மொழியப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஆனல்டை நிறுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்று மாலை, தன்னுடைய ஆதரவாளர்களை சந்தித்துக் கலந்துரையாடிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் முக்கியஸ்தரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான வி. மணிவண்ணன், தான் முன்னணி சார்பில் முதன்மை வேட்பாளராக முன் நிற்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில், நேற்று இரவு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டு யாருக்கு ஆதரவு வழங்கப் போகிறீர்கள்? என்று கேள்வி எழுப்பினர்,

அதற்கு பதிலளித்த அவர்,

இதுவரை எந்தத் தரப்புக்கு ஆதரவு வழங்குவது என்று தீர்மானிக்கவில்லை. ஒரு தரப்பும் எங்களுடன் பேச்சு நடத்தவும் இல்லை. இறுதி நேரத்திலேயே யாருக்கு ஆதரவு என்று முடிவெடுப்போம் என்று தெரிவித்துள்ளார். (ம-3,18,33)

## மரண வீட்டுக்கு...

வீட்டின் அறையிலிருந்த 50 ஆயிரம் ரூபாய் பணத்துடன் மாயமானார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை எழுதுமட்டுவாள் பகுதியில் மரணச் சடங்கு நடைபெற்றது. இதில் குடும்பத் தலைவர் இறந்த நிலையில் அவருக்கான இறுதிச் சடங்குகள் நடைபெற்று கொண்டிருந்தது.

இந்நிலையில் சம்பந்தமில்லாத பெண்ணொருவர் வீட்டுக்குள் உலாவுவதை அவதானித்த உறவினர்கள் பூசை அறைக்குள் சென்று பார்த்தபோது பூசை அறைத் தட்டில் வைக்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாய் பணத்தை காணவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

சந்தேகத்திற்கு இடமான முறையில் உலாவிய பெண்ணைத் தேடிய போது குறித்த பெண்ணையும் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/12/29 சீட்டிழுப்பு இலக்கம் 1561
சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 04 05 17 58

தன நிதானய
திகதி - 2020.12.29
சீட்டிழுப்பு இலக்கம் - 388
Q 30 42 66 76
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2646
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
T 58 61 69 78

மஹஜன சம்பத
திகதி 2020/12/29
சீட்டிழுப்பு இலக்கம் 4351
V 6 7 6 8 0 1

மெகா பவர்
திகதி 29/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0718
D 05 15 54 57 68

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,300,139/=
திகதி: 29.12.2020
வெற்றி வாரம்: 3028
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் கடகம்
31 34 44 51
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,806,980

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1147
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 29.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 94,296,055
வெற்றி இலக்கங்கள்
03 38 47 62 C

சனிதா
கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 3477
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 29.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,019,754
வெற்றி இலக்கங்கள்
16 30 36 47 0

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1321 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 29/12/2020 தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
M 20 36 50 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,397,856

நிதஸ்
சீட்டிழுப்பு வாரம் 670
29.12 2020
செவ்வாய்
N 06 53 54 80
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,887,275
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (5111)

## உதவியாளர் தேவை

K.K.S வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள My Pizza உணவகத்திற்கு உதவியாளர் தேவை.

வயதெல்லை : 20 - 25

5 km சுற்று எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (C-1052)

074 107 7190

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் ❯❯1150/=

லண்டன் ➔1050/= இத்தாலி ➔1250/=

5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-1047)

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)

பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய் |


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 26 . 11 . 1937

மறைவு 30 . 11 . 2020

அமரர்

## மயில்வாகனம் பத்மநாதன்

( இளைப்பாறிய யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியரும் பலாலி, அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலைகளின் விரிவுரையாளரும் )

மண்ணில் எம்மை நல்வாழ்வு வாழ வைத்தீர்
விண்ணில் இருந்து நல்லாசிகள் என்றும் நல்குவீர்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யும் குடும்பத்தினர்.

எமது குடும்பத் தலைவரின் அமரத்துவத்தின்போது உடனின்று உதவிய அன்புள்ளங்களிற்கும் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் காலத்தால் செய்த உதவிகளிற்காக எமது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

குறிப்பு : நாட்டுச் சூழல் காரணமாக அமரரின் ஆன்ம ஈடேற்ற கிரியைகளிற்கு அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம். (5104)

உடுவில் பிரதேச செயலக ஒழுங்கை,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.


## காணி தேவை

வடமராட்சி / தென்மராட்சி / அச்சுவேலி / சிறுப்பிட்டி / நீர்வேலி / கோப்பாய் பகுதிகளில் வீடு கட்டுவதற்கேற்ற காணி/ வீட்டுடன் காணி / தோட்டக் காணி தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

( தரகர் தேவையில்லை.) (5106)

076 410 6093

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ கும்பம், 1985 இல் பிறந்த அத்த நட்சத்திரம் 4ஆம் பாதம், பாவக்கிரகம் 23, சூரியன், செவ்வாய் 11 இல் உள்ள சுய தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (5105)

076 162 5193

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1049)

0768226240 DHL

## வீட்டு உதவியாளர் தேவை

பருத்தித்துறையில் உள்ள கணவனும் மனைவியும் வேலைக்கு செல்லும் 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வீட்டினில் உள்ள பிள்ளைகளை பாதுகாப்பாக பார்த்து கொள்ளவும் வீட்டு வேலைகளில் உதவி புரிய ஓர் பெண் உதவியாளர் தேவை. (5108)

077 315 1654

## A/L வரலாறு ( ONLINE CLASSES )

சாதனைமிக்க பெறுபேறுகளை தொடர்ச்சியாக பெற்றுத்தரும் உங்கள் ஆசான்

M. பத்மன் B.A (Hons) His. P.G.D.E, M.A (Hons )History

கடந்த சித்திரை மாதம் முதலே Online Classes நடைபெறுகிறது. மூன்று வெவ்வேறு நிறுவனங்களில் Online மூலம் கற்பிக்கப்படுகிறது. நீங்கள் எந்தக் குழுவிலும் இணைந்து படிக்கலாம். (C-1048)

| நிறுவனங்கள் | இணையவழி (App) | தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள் |
|---|---|---|
| D.M.I | Team Link (App) | 077 848 0604 |
| ஆர்வம் | Zoom (App) | 077 469 6540 |
| முயற்சி | Zoom (App) | 077 346 0397 |

இலங்கை முழுவதிலிருந்தும் மாணவர்கள் கற்கின்றனர், புதிதாக இணைவோருக்கு ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். A/L 2021, 2022 ஆகிய இரு பிரிவினருக்கும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. கடந்த காலங்களைப் போன்றே வறிய மாணவர்களுக்கான இலவச அனுமதியும் உண்டு. M.C.Q பயிற்சி, படவேலை, பயிற்சி பரீட்சைகளும் நடைபெறுகின்றன.

" சாதனை படைக்க இணைவோம். "

## வகுப்பு

German, Swiss செல்பவர்களுக்கான டொச் வகுப்புக்கள் மற்றும் A1 பரீட்சைக்குரிய இலகுவான வழிகாட்டலும் மற்றும் Personal Class களும் கற்பித்துக் கொடுக்கப்படும். (C-1019)

தொடர்பு : 076 401 8564



அதிமேதகு ஜனாதிபதியினதும்
கௌரவ பிரதமரினதும்
சிந்தனையின் செயல்வடிவம்



## வடக்கின் விவசாயப் புரட்சி

**North Lanka IIT City Campus**
**Faculty of Agriculture**

Agriculture Research உடன் இணைந்த பயிற்சி கல்லூரியுடன் கூடிய Modern Research Farm Kariyalai Nakapaduvaan, Poonakary.

Proposed by - S.A Balasubramaniyam Reading Ph.D
Rector - North Lanka IIT
City Campus,
Faculty of Agriculture.

Proposed Presented - Divisional Secretary
Divisional Secretariat,
Poonakary,
Kilinochchi.

Location -
Kariyalai Nakapaduvaan,
Poonakary Divisional.



NORTH LANKA RESEARCH FOUNDATION

B.Sc விவசாய விஞ்ஞான பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாவது பிரிவில்
30 மாணவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.
U.G.C அங்கீகாரம் உடைய
பல்கலைக்கழகம்.

தகைமை - NVQ Level 04/ O/L / A/L

Duration: 03 Years முழுநேரப் பயிற்சி

உடன் விண்ணப்பிக்கவும். (C-1049)

இப்பிரிவு மாணவர்களுக்கு மாத்திரம் சான்றிதழ் கட்டணம் Rs. 200 000. இலவசம்.

வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன. தொடர்புகளுக்கு : 076 750 4535, 077 884 9677, 077 865 7957

## அகரம்

உயர் நிலைக் கல்லூரி

கொக்குவில் மல்லாகம்

தரம் 06 - O/L வரையான
[தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.]

புதிய கல்வியாண்டு – 2021
30.12.2020
காலை 6 மணி முதல் 9 மணி வரையான
புண்ணிய காலத்தில் ஆரம்பமாகின்றது

குறிப்பு

தற்போதைய கோவிட் – 19 சூழ்நிலையை கருத்திற் கொண்டு zoom மூலமே வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. (5096)

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

நன்றி அகரம் நிர்வாகம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.